வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 27.02.2023 திங்கட்கிழமை | இதழ் : 80 | பக்கங்கள் : 16

# சகல உள்ளூராட்சி சபைகளும் மார்ச் 19ஆம் நாளுடன் கலையும்!

## கால நீடிப்புக்கு வாய்ப்பே இல்லை

கொழும்பு, பெப்ரவரி 27

எதிர்வரும் மார்ச் 19ஆம் திகதி நள்ளிரவுடன் நாட்டின் அனைத்து உள்ளூராட்சி சபைகளும் கலையும். இதன் பின்னர் உள்ளூராட்சி அமைச்சர் அனைத்து சபைகளுக்கும் விசேட ஆணையாளர்களை நியமிப்பார். உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெற்று புதிய உறுப்பினர்கள் பொறுப்பேற்கும் வரை இவர்களின் கீழேயே அனைத்து சபைகளும் இயங்கவுள்ளன. 15

## தொடர்ந்து ஏமாற்றும் ரணில் விரக்தியில் பெரமுனவினர்!

### அடுத்த நடவடிக்கை தொடர்பில் ஆராய்வு

கொழும்பு, பெப். 27

பொதுஜன பெரமுன கட்சியை தொடர்ந்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏமாற்றி வருகிறார். இதனால், அந்தக் கட்சியினர் தற்போது விரக்தியின் விளிம்புநிலையில் உள்ளனர் என்று கொழும்பு அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்று ஆறு மாதங்கள் கடந்து விட்டன. இந்தக் காலப் பகுதிக்குள் அமைச்சரவை நியமனம், ஆளுநர்கள் நியமனம் என்பன தொடர்பில் ஜனாதிபதிக்கும் பெரமுன கட்சியினருக்கும் இடையே பல உடன்பாடுகள் எட்டப்பட்டன.

ஆனால், இவ்வாறு உடன்பாடு எட்டப்பட்ட - 15

## உள்ளூராட்சி தேர்தலுக்கு முன்பு ஜனாதிபதி தேர்தல்?

கொழும்பு, பெப். 27

உத்தேச உள்ளூராட்சி சபை தேர்தலுக்கு முன்னராகவே ஜனாதிபதி தேர்தலை தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது என்று நம்பகரமான அரச உயர்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அரசமைப்பின் 31(3) (ஏ) உறுப்புரையில், ஜனாதிபதி பதவிக்கு முதன்முறையாக நியமிக்கப்படும் ஒருவர், தான் பதவியேற்று 4 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் ஜனாதிபதி தேர்தலை நடத்த விருப்பம் தெரிவிக்கலாம் என்று கூறுகின்றது.

இதன்படி, இந்த ஆண்டின் முடிவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலுக்கு அழைப்பு விடுக்கலாம். ஏனெனில், தற்போதைய ஜனாதிபதி பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டாலும் பதவி விலகிய ஜனாதிபதியான கோட்டாபய ராஜபக்ஷ பதவியேற்று 4 ஆண்டுகள் நிறைவடைந்ததும் - அதாவது எதிர்வரும் நவம்பர் 17 ஆம் திகதி அவர் பதவியேற்று நான்கு 15

## மனித உரிமை மீளாய்வு தொடர் இன்று ஆரம்பம்!

கொழும்பு, பெப். 27

இலங்கை உள்ளிட்ட 6 நாடுகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் குழுவின் மீளாய்வு கூட்டத் தொடர் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் மார்ச் 24ஆம் திகதி வரை நடை பெறவுள்ளது. 15

## கியூ. ஆர். முறைமை நீங்க பெற்றோல் விலை உயரும்!

கொழும்பு, பெப். 27

கியூ. ஆர். முறையில் எரிபொருள் வழங்கப்படும் முறைமை விரைவில் நீக்கப்படும். இதேநேரம், பெற்றோலின் விலையில் சிறிதளவு அதிகரிப்பு செய்யப்படும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

எனினும், எரிபொருளின் விலையை அதிகரிப்பதற்கு தற்போதைக்கு எந்த தீர்மானமும் 15

## ஜே. வி. பியின் ஆர்ப்பாட்டத்தை தடுக்க முனைந்ததால் பதற்றம்!







### கண்ணீர் புகைக் குண்டு வீச்சு! தண்ணீர் தாரைப் பிரயோகம்! 28 பேர் மருத்துவமனையில்!!

கொழும்பு, பெப். 27

ஜே. வி. பி. கட்சியின் ஏற்பாட்டில் நேற்று நடந்த ஆர்ப்பாட்டத்தை பொலிஸார் கலைக்க முயன்றபோது ஏற்பட்ட பதற்றத்தில் முதல் கட்ட தகவலின் அடிப்படையில் 28 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு யூனியன் பிளேசில் நடந்த பேரணியைக் கலைக்க பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளையும் நீர் தாரை பிரயோகமும் செய்திருந்தனர்.

ஜே. வி. பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க உட்பட முக்கியஸ்தர்கள் தாமரை தடாக பகுதியில் இருந்து எதிர்ப்பு பேரணியை ஆரம்பித்தனர். எனினும் அவர்கள் யூனியன் பிளேஸை அடைந்தபோது தடுத்து நிறுத்தப்பட்டனர்.

பெருந்திரளான மக்கள் திரண்ட இந்த ஆர்ப்பாட்டத்தை பொலிஸார் தடுத்த நிலையில், அவர்கள் தொடர்ந்தும் பேரணியை முன்னே செல்ல 15

## பிரதமர் பதவியிலிருந்து தினேஷ் விலகமாட்டார்!

### பிரதமரின் அலுவலகம் தகவல்



கொழும்பு, பெப். 27

“பிரதமர் பதவியிலிருந்து தினேஷ் குணவர்த்தன விலகப் போகிறார் என்று வெளியான தகவல்கள், அறிக்கைகள் முற்றிலும் பொய்யானவை. அவர் பதவியிலிருந்து விலக மாட்டார்”, என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமர் 15

## ஜே. வி.பிக்கான ஆதரவாலேயே தேர்தலை அரசு பிற்போடுகிறது!

### அதன் தலைவர் அநுரகுமார

கொழும்பு, பெப். 27

நாட்டிலிருந்து குடும்ப ஆட்சியை அகற்றுவதற்காக பெருமளவு மக்கள் தேசிய மக்கள் சக்தியுடன் இணைவதால் அச்சமடைந்துள்ள அரசாங்கம் உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைப்பதற்காக சதிசெய்கின்றது என ஜே. வி. பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க தெரி வித்துள்ளார்.

அத்துடன், 15

# இப்படியும் நடக்கிறது...!

அவர் விடுதலைப் புலிகள் இயக்க முன்னாள் போராளி. ஆயுதம் தூக்கி போராடியதிலும் பார்க்க, அவர் தனது பேனாவையே அதிகம் பயன்படுத்திய போராளி.

விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ பத்திரிகையில் 'வழுதி' என்ற பெயரில் கட்டுரைகளை எழுதியவர் என்பதால் அந்தப் பெயரையே தொடர்ந்து பயன்படுத்தி வருபவர்.

யுத்தம் மௌனிக்கப்பட்ட காலத்தில் அமெரிக்காவில் வாழ்ந்த வழுதி, யுத்தம் முடிவடைந்த பின்னரே தாயகம் திரும்பியவர். யுத்தம் முடிவடைந்த சில மாதங்களில் புதினம் இணையப் பத்திரிகையில் அவர் எழுதிய கட்டுரை ஒன்று புலம்பெயர் புலி ஆதரவாளர்களை கிளர்ந்தெழச் செய்தது.

அவர் அப்போது 'புதினம்' இணைய இதழில் எழுதிய அந்தக் கட்டுரையை தமிழக இணைய பத்திரிகை ஒன்று மீள் பிரசுரம் செய்திருந்தது.

பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்று யாரோ சொல்லச் சொன்னதை நெடுமாறன் எந்தவித பொறுப் புணர்வும் இல்லாமல் சொல்லியதைத் தொடர்ந்து அதுபற்றிய சர்ச்சையே தமிழகத்தை சில நாட்களாக ஆக்கிரமித்திருந்தது.

வழுதியின் அந்த கட்டுரையிலிருந்து சில பகுதிகளை கீழே தருகின்றேன்.

'கடவுளைப் போலவே அவரும் இருக்கிறாரா இல்லையா என்ற ஆய்வுகளை செய்யாமல் - அவர் காட்டிய வழியில் பயணிக்க வேண்டும் எனக் கருதுகின்றோம். எங்கோ ஓர் இடம் போயுள்ளார் என்றும் என்றோ ஒருநாள் அவர் திரும்பி வருவார் என்றும் காத்திருக்கின்றோம். எமது மனங்களில் என்ன இருந்தாலும், நாம் நம்ப மறுத்தாலும் அவர் இனித் திரும்பி வரப் போவதில்லை என்பதே உண்மையானது.

தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை பற்றிய தூய்மையான கனவைச் சுமந்து - முப்பத்தியேழு ஆண்டுகளாக அந்தக் கனவை நனவாக்குவதற்கு மட்டுமே போராடிய அந்த உன்னதமான மனிதர் - எமது இனத்தின் பெருந் தலைவர் - அந்தப் போராட்டக் களத்திலேயே வீழ்ந்து போனார்.'

இப்படித்தான் தொடங்குகின்றது வழுதியின் அந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரை இன்று நேற்றல்ல, புலிகள் மௌனிக்கப்பட்ட ஒரு சில மாதங்களில் எழுதப்பட்டது.

இதுபற்றி இப்போது எதற்காகப் பேசவேண்டியிருக்கின்றது என்று நீங்கள் கருதலாம். அண்மையில், நெடுமாறனின் அறிவிப்புக்கு பின்னர் அதுகுறித்து பலரும் தத்தமது எதிர்வலைகளை வெளிப்படுத்தி வருகின்றனர்.

நெடுமாறனின் இக்கருத்துக்கு பல தரப்பட்டோர் மத்தியில் எதிர்வலைகள் தோன்றியிருக்கின்றன. 'புதினம்' இணையத்தளத்தில் வழுதி எழுதியபோது 'புதினம்' இணையத்தளம் இந்திய, இலங்கை உளவுத்துறைக்கு விலை போய்விட்டதாக அன்றைய காலகட்டத்தில் 'புதினம்' இணையத்தளம் மீது சேறு வாரி பூசி தூற்றி எழுதியும் வந்தனர்.

முதலாவது பாகம் வெளிவந்த பின்னரே கடும் கண்டனங்கள் தெரிவிக்கப்பட்ட போதிலும், அப்போதே அந்த சேற்றையும் புழுதியையும் கழுவிவிட்டு தொடர்ந்து அதன் இரண்டாம் மூன்றாம் பாகங்களை புதினம் வெளியிட்டது.

காலச்சக்கரம் எவ்வளவு வேகமானது பாருங்கள்.

இப்போது நெடுமாறன் வெளியிட்ட அறிக்கைக்கு அவரை இயக்குவது இந்திய புலனாய்வுத்துறை என்று புலத்தில் உள்ள தீவிர தமிழ்த் தேசியம் பேசுபவர்களே சலித்தவாறே குற்றம்சாட்டி- நெடுமாறனை பரிகாசமாக பார்க்கின்ற நிலைக்குக் கொண்டு வந்துள்ளனர்.

அதிலும் நாம் தமிழர் இயக்க சீமான் தரப்புக்கூட நெடுமாறன் இந்திய புலனாய்வுத்துறையின் நிகழ்ச்சி நிரலுக்கு கீழே இயங்குகிறார் என்று குற்றம் சாட்டியுள்ளது.

அன்று தலைவர் இனி வரமாட்டார் என்று 'புதினம்' இணையத்தளம் கூறிய உண்மையை ஏற்க மறுத்தவர்கள் இன்று பிரபாகரன் தொடர்பான நெடுமாறனின் கருத்தைப் பெருமளவில் கருத்தில் கொள்ளாத நிலையே தோன்றியுள்ளது. தமிழ்நாட்டில் ஊடக நண்பர்கள்கூட ஒருவித சலிப்புடன் ஏன் நெடுமாறன் இப்படி செய்கின்றார் என்று கேள்வி கேட்டுள்ளனர்.

தலைவர் இல்லை என்று அன்று கூறிய புதினமும் புலனாய்வுத்துறையின் நிகழ்ச்சி நிரலில் இயங்கியது என்றார்கள். தற்போது தலைவர் இருக்கிறார் என்கின்ற நெடுமாறன் தரப்பும் அதே புலனாய்வுத் துறையின் கீழ் இயங்குகின்றது என்கின்றனர்.

தியாகிகள் துரோகிகள் ஆவதும் துரோகிகள் தியாகிகள் ஆவதும் இப்படித்தான் போலும்.!

**- ஊர்க்குருவி**

# இந்திய கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடிக்க அனுமதி வழங்கக்கூடாது!

## ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்ப மீனவர்கள் முடிவு

யாழ்ப்பாணம், பெப். 27

இந்திய கடற்றொழிலாளர்களுக்கு இலங்கை கடற்பரப்பில் அனுமதி வழங்கும் முறைமைக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு கடற்றொழிலாளர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்திய கடற்றொழிலாளர்களுக்கு இலங்கை கடற்பரப்பில் கடற்றொழில் செய்வதற்கு அனுமதி வழங்குவது தொடர்பில் பரிசீலிக்கப்படுவதாக, வெளியான செய்தி தொடர்பில், யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்று ஞாயிற்றுக் கிழமை வடபகுதி கடற்றொழிலாளர் பிரதிநிதிகள் இடையே கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. குறித்த கலந்துரையாடலிலையே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

குறித்த கலந்துரையாடலில்,



இந்திய கடற்றொழிலாளர்களுக்கு இலங்கை கடல் பரப்பில் கடற்றொழில் மேற்கொள்ள அனுமதிக்கக் கூடாது என வலியுறுத்தியும் இதற்கு நடவடிக்கை எடுக்க கோரியும் நேரில் சந்தித்து பேச வாய்ப்பு தருமாறு ஜனாதிபதியிடம் கடிதம் மூலம் கோருவது.

ஜனாதிபதியிடம் இருந்து, கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைக்காது விட்டால் வடபகுதி கடற்றொழிலாளர்கள் அனைவரும் இணைந்து போராட்டத்தில் ஈடுபடுவது. அத்துடன், பாராளுமன்றில் பேசிய வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி, இந்திய கடற்றொழிலாளர்களுக்கு இலங்கை கடற்பரப்பில் அனுமதி வழங்கும் முறைமையை பரிசீலிப்பதாக தெரிவித்தமை ஏற்றுக் கொள்ள முடியாது.

புனித ஸ்தலமான கச்சதீவை கடற்றொழிலாளர்கள் பேச்சு என்ற பெயரில் பேச்சுக்களை நடத்த அனுமதிக்கக்கூடாது என யாழ் மறைமாவட்ட ஆயரிடம் ஊடகங்கள் வாயிலாக கோருவது என்றும் இதன்போது முடிவுகள் எடுக்கப்பட்டன. (ஐ)

# வரவு - செலவு திட்டம் மூலம் தேர்தலுக்கு நிதி ஒதுக்க முயற்சி!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, பெப். 27

தேர்தல் செலவு குறித்து எங்களுக்கு இன்னும் தெளிவாக தெரியவில்லை. தேர்தல் ஆணைக்குழு ஆயிரம் கோடி ரூபாய் என மதிப்பிட்டது. ஆனால், 600 கோடி ரூபாய் கேட்டது. எங்களால் தற்காலிகமாக பணம் செலுத்த முடியாது. எனவே அவற்றை ஆய்வு செய்து சரியான வரவு - செலவுத் திட்டத்தை உருவாக்க நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளேன் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் கணக்கின் ஊடாக இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்காலிக கொடுப்பனவுகளை செலுத்த முடியாத நிலையில் எதிர்வரும் தேர்தலுக்கான செலவுகளுக்கு சரியான வரவு - செலவு திட்டத்தை வழங்குமாறு நிதியமைச்சுக்கு அறிவித்துள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் ஒரு பொருளாதார நெருக்கடியை எதிர் கொள்கிறோம். மேலும், எங்கள் செலவீனங்களை கவனமாக திட்டமிட வேண்டும். ஆண்டு முழுவதும் வரவு - செலவு திட்டம் தயாரிக்கப்படுகிறது. எனவே, தற்காலிக அடிப்படையில் நிதியை விடுவிக்க முடியாது. எதிர்பார்த்தபடி மார்ச் மாதத்தில் ஐ. எம். எவ். கிடைக்காத பட்சத்தில் நாம் இருப்பு வைத்திருக்க வேண்டும்.

தேர்தல் செலவு குறித்து எங்களுக்கு இன்னும் தெளிவாக தெரியவில்லை. தேர்தல் ஆணைக்குழு ஆயிரம் கோடி ரூபாய் என மதிப்பிட்டது. ஆனால், 600 கோடி ரூபாய் கேட்டது. எங்களால் தற்காலிகமாக பணம் செலுத்த முடியாது. எனவே அவற்றை ஆய்வு செய்து சரியான வரவு - செலவுத் திட்டத்தை உருவாக்க நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளேன்.

எங்களிடம் தேவையான அனைத்து பணமும் இல்லை, எனவே முன்னுரிமைகளுக்கு பணம் கொடுக்கப்பட வேண்டும். 28 இலட்சம் குடும்பங்களுக்கு அரிசி விநியோகம், ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் திவால் நிலையை எதிர்கொள்ளும் சிறு தொழில்களுக்கு நிவாரணம் வழங்க 2 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளோம். இந்தக் கொடுப்பனவுகளைத் தாமதப்படுத்த வேண்டுமானால் பாராளுமன்றம் எனக்குத் தெரிவிக்கலாம் - என்று பதிவிட்டுள்ளார். (ஐ)

# மெய்வன்மை போட்டி!

யாழ்ப்பாணம், பெப். 27

காங்கேசன்துறை நடேஸ்வர கல்லூரி, நடேஸ்வர கனிஷ்ட வித்தியாலயம், காங்கேசன்துறை மகா வித்தியாலயம் ஆகியவற்றின் இல்ல மெய்வன்மை போட்டி நாளை செவ்வாய்க் கிழமை மதியம் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நடேஸ்வரக் கல்லூரியின் அதிபர் கு. விமலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி நிர்வாகம்) சி. மதியழகன், சிறப்பு விருந்தினராக தெல்லிப் பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே. அரசகேசரி, கௌரவ விருந்தினராக ஹற்றன் நஷனல் வங்கியின் ஓய்வுபெற்ற முகாமையாளர் செ. கிரிதரன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ஐ)



நீர்வேலி கந்தசுவாமி கோவிலில் கடந்த மூன்று வருடங்களுக்கும் மேலாக வாராந்த சொற்பொழிவை ஒழுங்கமைத்தமைக்காக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் கடந்த வெள்ளிக்கிழமை பாராட்டி கௌரவிக்கப்பட்டார். இதன் போது அவருக்கு 'பிரசங்க மரபுக் காவலர்' என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

ஈழநாடு
Eelanadu
27.02.2023 திங்கட்கிழமை
பிலவ வருடம், மாசி 15

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

## ஜே. வி. பியின் தேர்தல் விருப்பத்திற்கு பின்னால்?

தேர்தலை நடத்தாவிட்டால், மக்கள் போராட்டம் வெடிக்குமென்று ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி) தீவிர பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றது. மார்ச் மாதம் (அடுத்தமாதம்) நாட்டில் வரலாற்று மாற்ற மொன்று ஏற்படுமென்று ஜே. வி. பியின் தலைவர் அநுரகுமார திஸ நாயக்க கூறுகின்றார். தேசிய மக்கள் சக்தியென்னும் முகமூடியுடன் இயங்கிவரும் ஜே. வி. பி. ஏன் தேர்தலில் இந்தளவு ஆர்வம் காண்பிக் கின்றது?

ஜே. வி. பியின் தேர்தல் ஆசைக்கு பின்னால் ஒரு பலமான காரணி யுண்டு. அதாவது, தற்போது தேர்தல் இடம்பெற்றால் முன்னணி வகிக்கக்கூடிய வாய்ப்பு ஜே. வி. பிக்கே உண்டு. அண்மையில், மக்கள் கருத்தறியும் ஆய்வொன்று இடம்பெற்றது. இந்த ஆய்வை (Institute for Health Policy (IHP) என்னும் நிறுவனம் மேற்கொண்டிருந்தது.

இதன்படி, தேர்தலொன்று இடம்பெற்றால் ஜே. வி. பிக்கும், சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையிலேயே பிரதானமாக போட்டி இடம்பெறுமென்றும் அதன்படி, 32 வீதமான வாக்குகளை பெற்று ஜே. வி. பியே முன்னிலை வகிக்குமென்றும் - குறித்த ஆய்வின் முடிவு கூறுகின்றது. குறித்த நிறுவனம் நாடு தழுவி, 9,710 நேர்காணல்களை மேற்கொண்டிருந்தது. வடக்கு - கிழக்கை தவிர, இலங்கையின் ஏனைய பகுதிகளில் ஜே. வி. பிக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையிலேயே பிரதானமாக போட்டி நிலவும்.

பிரதான கட்சிகளான பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறீ லங்கா சுதந்திர கட்சி ஆகியவை போட்டியில் மோசமான பின்னடைவுகளை சந்திக்குமென்று குறித்த ஆய்வு கூறுகின்றது. பொதுஜன பெரமுன மோசமான வீழ்ச்சியை சந்திக்கும். அதாவது, 2020இல் பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவளித்தவர்களில், ஏழில் ஒருவரே இம்முறை பொதுஜன பெரமுனவுக்கு வாக்களிப்பாரென்று குறித்த ஆய்வின் முடிவு கூறுகின்றது.

ஜே. வி. பி., தேர்தலை நடத்த வேண்டும் என்பதில் தீவிரமாக இருப்ப தற்கு பின்னாலிருக்கும் பிரதான காரணம் இதுதான். அதிகாரத்தை கைப் பற்றுவதற்கு இதுதான் சரியான தருணமென்று ஜே. வி. பி. கருதுகின்றது. ஜே. வி. பியின் அணுகுமுறைகளில் சில மாற்றங்களை காண்பித்தாலும் கூட, தமிழர் பிரச்னையை பொறுத்தவரையில், ஜே. வி. பிக்கும் ஏனைய தென்னிலங்கை சிங்கள - பௌத்த கட்சிகளுக்கும் இடையில் மலையளவு வேறுபாடுகள் இல்லை. ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து வெளிவரும் சாதகமான அபிப்பிராயங்கள்கூட, ஜே. வி. பியின் பக்கத்திலிருந்து வருவதில்லை.

ஜே. வி. பி, இடதுசாரித்துவ சிந்தனையை முன்னிலைப்படுத்துவதாக காண்பித்துக் கொண்டாலும்கூட, தமிழரின் தேசிய இனப்பிரச்னை விவகாரத்தில் முன்னேற்றகரமான நிலைப்பாடுகளை இதுவரையில் வெளிப்படுத்தியதில்லை.

மேலும் கடந்த காலத்தில், மகிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய சகாக்களாக செயல்பட்டவர்கள். இறுதி யுத்தத்தின்போது, விடுதலைப் புலிகளை அழிக்க வேண்டுமென்பதில் ராஜபக்ஷக்களுக்கு மனோ ரீதியான ஆதரவை வழங்கியதில் பிரதான பங்கு ஜே. வி. பிக்கே உண்டு. தமிழினத்தின் தாயகக் கோட்பாட்டை இல்லாதொழிக்க வேண்டும் என்பதில் ஏனையவர்கள் எவரையும் விடவும் மிகவும் தீவிரமாக இருந்தது ஜே. வி. பிதான். இதனடிப்படையில்தான், 2006இல், வடக்கு - கிழக்கு இணைப்பின் சட்ட வலுவை கேள்விக்கு உள்ளாக்கும் வகை யில் வழக்கை தாக்கல் செய்து, வடக்கு, கிழக்கு மாகாணங்களை இரண்டு நிர்வாக அலகுகளாக பிரிப்பதற்கு ஜே. வி. பியே, காரணமாக விருந்தது.

# பிரபாகரனுக்கு அடுத்து நாட்டில் அழிவை ஏற்படுத்தியது ஜே.வி.பியே

## பத்திய தேரர் சொல்கிறார்

கொழும்பு, பெப். 27

பிரபாகரனுக்கு பிறகு நாட்டிற்கு மிகப்பெரிய அழிவை மக்கள் விடுதலை முன்னணி (ஜே. வி. பி.) செய் துள்ளதாக திஹாகொட பத் திய தேரர் தெரிவித்துள் ளார்.

கடந்த காலங்களில் ஜே. வி. பி. நாட்டுக்கு செய்த அழிவுகளை மக்கள் மறக்க வில்லை என்றும், தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் தோன்றினாலும், இன்னமும் அதே கொடிய கட்சிதான் என்றும் அவர் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பௌத்த விவகாரங்களின் தலைவராக நியமிக்கப்பட்ட தனவர்தன குருகேவுடன் அஸ்கிரிய மற்றும் மல் வத்தை பீடங்களின் மகா நாயக்க தேரர்களை சந்தித்து ஆசி பெற்றதன் பின்னர் ஊடகவியலாளர்கள் முன்னி லையில் கருத்து தெரிவிக் கும் போதே தேரர் இவ்வாறு தெரிவித்தார். கடந்த காலத்தை அறியாத இளை ஞர்கள் தேசிய மக்கள் சக்தி யைச் சுற்றித் திரண்டு வரு கின்றனர் என்றார்.

தலதா மாளிகை மீதான தாக்குதல், பிக்குகள் படு கொலை, அரச சொத்துக்கள் அழிக்கப்பட்டமை போன்ற பல அழிவுச் செயல்களுக்கு ஜே. வி. பி. பொறுப்பேற்றது என்பது அனைவரும் அறிந்த உண்மை.

அவர்கள் செய்த குற்றங்க ளை ஏற்றுக்கொள்ளாத ஒரு குழுவிடம் நாட்டின் ஆட்சி சென்றால், ஏற்படும் சூழ் நிலையை எவரும் கற்பனை செய்து பார்க்க முடியும் என்றும் கூறினார்.

# யானைக்கால் நோயாளர்களின் எண்ணிக்கை திடீர் அதிகரிப்பு

கொழும்பு, பெப். 27

நாட்டின் எட்டு மாவட் டங்களில் யானைக்கால் நோய் பரவும் அபாயம் காணப்படுகிறது. கடந்த வருடத்தில் மாத்திரம் 400 புதிய நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர் என்று யானைக்கால் நோய்க் கட் டுப்பாட்டு அமைப்பு அறிவித்துள்ளது.

நோயை கட்டுப்படுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் வீடுகளுக்கு வரும் சுகாதாரத் துறை அதிகாரிகளுக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று யானைக் கால் நோயைக் கட்டுப் பாட்டு அமைப்பின் பணிப் பாளர் மருத்துவர் உதய ரத்நாயக்க தெரிவித்துள் ளார்.

அனைத்து சுகாதார அதிகாரிகளும் உத்தியோக பூர்வ சீருடை மற்றும் உத்தியோகபூர்வ அடை யாள அட்டைகளுடன் வீடுகளுக்கு வருகை தரு வார்கள் என்றும் பணிப் பாளர் குறிப்பிட்டார்.

கொழும்பு, களுத்துறை, மாத்தறை, காலி, அம்பாந் தோட்டை, கம்பஹா, புத் தளம், மற்றும் குருநாகல் மாவட்டங்களில் இந்நோய் தொடர்ந்து பரவி வருகின் றது. கடந்த வருடத்தில் மாத்திரம் 400 புதிய நோயா ளர்கள் இனங்காணப்பட் டுள்ளனர்.

2030ஆம் ஆண்டளவில் இந்நோயை இலங்கையிலி ருந்து ஒழிப்பது அரசாங்கத் தின் எதிர்பார்ப்பாகும். நோயாளிகளைக் கண்ட றிந்து சிகிச்சை அளிப்பதற் காக, இரத்தப் பரிசோதனை கள் தொடர்ந்தும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவிக்கப்பட் டது. (ஐ)

# ஊடக அறிக்கை மூலம் மட்டும் தேர்தலை ஒத்திவைக்க முடியாது

கொழும்பு, பெப். 27


உள்ளூராட்சி சபைத் தேர்தல் மார்ச் 9ஆம் திகதி நடைபெறாது என்று ஊடக அறிவிப்பு ஊடாக மாத்திரம் அதனை ஒத்திவைக்க முடியாது என்று சட்ட வல்லுநர்கள் சுட்டிக்காட்டி யுள்ளனர்.

தேர்தல்கள் ஆணைக்குழு வின் இந்த நடவடிக்கை தவ றானது என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

தேர்தல் ஆணைக்குழு கடந்த வெள்ளிக்கிழமை கூடியது. வர்த்தமானியில் அறிவித்தவாறு மார்ச் 9ஆம் திகதி உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த முடியாது என்றும் மார்ச் 3ஆம் திகதி தேர்தலுக்கான புதிய திகதி தொடர்பில் ஆணைக்குழு அறிவிக்கும் என்று ஊடக அறிக்கையை வெளியிட் டது.

வர்த்தமானியில் அறி விக்கப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்தி வைப்பதென்றால், அனைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களையும் அழைத்து கூட்டம் நடத்தி அதன் பிரகாரம் வர்த்தமானி யில் தேர்தல் ஒத்திவைப்பு தொடர்பான அறிவித்தலை வெளியிட வேண்டும் என் றும் அதுவே சட்டரீதியா னது எனவும் சுட்டிக்காட் டப்பட்டது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**பெப்ரவரி - 27** திங்கட்கிழமை
சுபகிருது வருடம் - மாசி 15
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : அஷ்டமி




**மேடம்**
செயல்களில் நீங்கள் எதிர்பார்த்த நன்மைகள் இன்று தள்ளிப்போகும். கவனக்குறைவால் பணிகளில் தடுமாற்றம் ஏற்படும். செயல்களில் நிதானம் அவசியம். கடவுள் வழிபாட்டில் மனம் செல்லும்.

**இடபம்**
மதியம் வரை வேலை பளு அதிகரிக்கும். குடும்பத்திற்காக திடீர் செலவுகள் ஏற்படும். வரவுகள் ஒரு பக்கம் வந்தாலும் செலவுகள் மறுபக்கம் தயாராக இருக்கும். நிதானமுடன் செயல்படுங்கள்.

**மிதுனம்**
நீங்கள் மேற்கொள்ளும் முயற்சிகள் ஆதாயம் தரும். எதிர்பார்த்தவற்றில் லாபம் காண்பீர்கள். புதிய முயற்சி ஒன்றில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். வியாபார இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும்.

**கடகம்**
தொழிலில் இருந்த மந்த நிலை சரியாகும். உங்கள் அணுகுமுறையால் லாபம் அதிகரிக்கும். புதிய திட்டங்கள் தீட்டி செயல்படுவீர்கள். நண்பர்கள் உதவியுடன் உங்கள் முயற்சி பலிதமாகும்.

**சிம்மம்**
நேற்றுவரை இருந்த சங்கடமான நிலை மாறும். உங்கள் அணுகுமுறை ஆதாயத்தை ஏற்படுத்தும். நீங்கள் நினைத்திருந்த ஒரு செயலை நிறைவேற்றுவீர்கள். பொருளாதார நிலை உயரும்.

**கன்னி**
மதியம் வரை கவனத்துடன் செயல்படுங்கள். பிறரை நம்பி பொறுப்பை ஒப்படைக்காதீர். எதிர்பார்த்த செயல்களில் பின்னடைவும் மறைமுக எதிர்ப்பும் உண்டாகும்.

**துலாம்**
இன்று மதியத்திற்குள் எதிர்பார்த்த செய்தி வரும். அதன்பின் சிறிய சங்கடம் உண்டாகும். மதியம் வரை உங்கள் எண்ணம் நிறைவேறும். அதன்பின் செயல்களில் நிதானம் அவசியம்.

**விருட்சிகம்**
முயற்சிகள் வெற்றியாகும். ஆதாயம் அதிகரிக்கும். வியாபாரத்தில் ஏற்பட்ட பிரச்னைகளை சரி செய்வீர்கள். வேகமாக செயல் பட்டு நினைத்ததை நிறைவேற்றிக் கொள்வீர்கள். முயற்சிகள் லாபமாகும்.

**தனுசு**
செயல்களில் தடைகளை சந்திப்பீர்கள். சிந்தித்து செயல்படுவதால் நன்மைகள் அதிகரிக்கும். கடும் முயற்சிக்குப்பின் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். பெற்றோர் வழியே நன்மையுண்டு.

**மகரம்**
மனம் விரும்பும் வகையில் செயல்படுவீர்கள். பிள்ளைகள் வழியில் நன்மை காண்பீர்கள். எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். உங்கள் எண்ணம் இன்று எளிதாக நிறைவேறும்.

**கும்பம்**
திட்டமிட்டு செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். தடைபட்டிருந்த செயல்கள் நடந்தேறும். ஆதாயம் அதிகரிக்கும்.

**மீனம்**
குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்களை சரி செய்வீர்கள். உங்கள் வருமானம் உயரும். வார்த்தைகளில் கவனம் தேவை. சகோதரர்களை அனுசரித்துச் செல்வதின் மூலம் நன்மைகள் உண்டு.

# ஈரோடு இடைத்தேர்தல் இன்று

*சென்னை, பெப். 27*

*ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது. வாக்குப்பதிவுக்கு தேர்வு செய்யப்பட்ட 238 வாக்குச்சாவடிகளில் அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.*

*இந்த தேர்தலில் ஆளும் தி. மு. க. கூட்டணி சார்பில் காங்கிரஸ் கட்சி சார்பில் ஈ. வி. கே. எஸ். இளங்கோவன், அ. தி. மு. க. சார்பில் கே. எஸ். தென்னரசு, நாம் தமிழர் கட்சி சார்பில் மேனகா நவநீதன், தே. மு. தி. க. சார்பில் எஸ். ஆனந்த் மற்றும் சுயேச்சைகள் என மொத்தம் 77 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.*

*ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினராக இருந்த திருமகன் ஈவெரா கடந்த ஜனவரி 4ஆம் திகதி மாரடைப்பால் இறந்தார். இதைத் தொடர்ந்து அந்த தொகுதி வறிதானதாக அறிவிக்கப்பட்டு வரும் திங்கள்கிழமை (பிப்ரவரி 27) தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையம் கடந்த ஜனவரி 18 ஆம் தேதி அறிவித்தது.*

*கடந்த ஜனவரி 31ஆம் திகதி வேட்பு மனு தாக்கல் தொடங்கியது. இதில் அரசியல் கட்சியினர் மற்றும் சுயேச்சைகள் ஏராளமானோர் மனுதாக்கல் செய்தனர். மொத்தம் 121 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இதில் 83 வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டன. 38 மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. இந்த தேர்தலில் 2 இலட்சத்து 26 ஆயிரத்து 898 பேர் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர்.*

*(ஐ)*

# ஈரோடு கிழக்கில் தங்கக்காசு வழக்கப்பட்டதால் பரபரப்பு!

*ஈரோடு, பெப். 27*

*ஈரோடு கிழக்கு தொகுதி வாக்காளர்களுக்கு, தி. மு. க. மற்றும் அ. தி. மு. க. சார்பில் வீடுகள்தோறும் ரோக்கன் வழங்கப்பட்டுள்ளது. இதில் குறிப்பிட்ட சில இடங்களில் தங்கக் காசு மற்றும் மூக்குத்தி வழங்கப்பட்டமையால் வாக்காளர்களிடையே எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.*

*ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் இன்று திங்கட்கிழமை நடக்கிறது. வாக்காளர்களை கவரும் வகையில், தி. மு. க. மற்றும் அ. தி. மு. கவினர் பணம் மற்றும் பல்வேறு பரிசுப் பொருட்களை வாக்காளர்களுக்கு வழங்கி வருகின்றனர். வீடுகள்தோறும், வாக்குகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, தி. மு. க. சார்பில் ஒரு வாக்குக்கு 3000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அதோடு, குக்கர், ஸ்மார்ட் வோட்ச், வெள்ளி தம்ளர், ஹொட் பொக்ஸ், வீட்டு உபயோகப் பொருட்கள், வேட்டி, சேலை உள்ளிட்ட பல்வேறு பரிசுப்பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.*

*அ. தி. மு. க. சார்பில் ஒரு வாக்குக்கு 2,000 ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. அதோடு, அகல் விளக்கு, வெள்ளி தம்ளர், உடைகள் உள்ளிட்ட பரிசுப்பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன. 2ஆம் நாளாக நேற்றும் பட்டுச் சேலை, வெள்ளி அகல்விளக்கு, வெள்ளித் தட்டு உள்ளிட்ட பரிசுப்பொருட்கள் விநியோகமும் தொடர்ந்தது.*

*இந்நிலையில், தி. மு. க. மற்றும் அ. தி. மு. க. சார்பில் இரண்டு வாக்குகளுக்கு மேல் உள்ள வீடுகளுக்கு ஒரு 'ரோக்கன்' வழங்கப்பட்டுள்ளது. இதற்கான சிறப்புப் பரிசு வழங்கப்படும் என இரு தரப்பிலும் உறுதி அளிக்கப்பட்டுள்ளது.*

*இந்நிலையில், கச்சேரி சாலை பகுதியில் உள்ள வீடுகளுக்கு, ஒரு கிராம் தங்க நாணயம் வழங்கப்பட்டுள்ளது. இதே போல, அன்னை சத்யா நகர், பிராமண பெரிய அக்ரஹாரம் பகுதிகளில் தங்க மூக்குத்தி வழங்கப்பட்டன. வாக்காளர்களிடையே இந்த விநியோகம் பெரும் பரபரப்பையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது. ஈரோடு கிழக்கு தொகுதி வாக்காளர்கள் ஒருவருக்கொருவர், உங்கள் பகுதியில் ரோக்கன் வழங்கப்பட்டதா, தங்கக்காசு வழங்கப்பட்டதா என விசாரித்து வருகின்றனர். நேற்றுவரை சட்டவிரோதமாக பரிசுப் பொருட்கள் வழங்கும் நிகழ்வுகள் தொடர்ந்து வந்தன.* *(ஐ)*

# ஈரோட்டில் எமது திட்டங்களை தி. மு. க. அரசாங்கம் நிறுத்தியது!

## எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு

*ஈரோடு, பெப். 27*

*அ. தி. மு. க. ஆட்சியில் கொண்டு வரப்பட்ட பல மக்கள் நலத் திட்டங்களை தி. மு. க. அரசு நிறுத்திவிட்டதாக அ. தி. மு. க. இடைக்கால பொதுச் செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான பழனிசாமி குற்றம்சாட்டினார்.*

*ஈரோடு கிழக்கு தொகுதியில் நேற்றுமுன்தினம் பிரசாரத்தில் ஈடுபட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.*

*தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. பெண்களுக்கு பாதுகாப்பு இல்லை. போதைப்பொருள் விற்பனை*



*அதிகரித்துவிட்டது. அதிமுக ஆட்சியில் 11 மருத்துவக் கல்லூரிகள் உட்பட ஏராளமான கல்லூரிகள் தொடங்கப்பட்டன. இதனால், உயர்கல்வி படிப்போர் எண்ணிக்கை 32 சதவீதத்தில் இருந்து 54 சதவீதமாக உயர்ந்தது. கடந்த 22 மாதங்களில் ஊழல் செய்து கொள்ளையடித்த பணத்தை, இந்த தேர்தலில் தண்ணீர்போல் செலவழிக்கின்றனர். இவற்றை தேர்தல் ஆணையம் வேடிக்கை பார்க்கிறது.*

*2011ஆம் ஆண்டு அ. தி. மு. க. ஆட்சி அமைந்தபோது, 1.34 இலட்சம் கோடி கடன் இருந்தது. 10 ஆண்டுகள் ஆட்சி செய்து பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தி, கரோனா பெருந்தொற்றை எதிர்கொண்டபோதும், கடன் தொகை உயரவில்லை. ஆனால், நிதிநிலையை சீராக்குவதாக கூறிய திமுக ஆட்சியில், 2 ஆண்டுகளில் 1.62 லட்சம் கோடி கடன் வாங்கியுள்ளனர் -என்றார்.*

# எம் ஆட்சியை எடைபோடும் தீர்ப்பாக இடைத்தேர்தல்!

## முதலமைச்சர் ஸ்டாலின்

*ஈரோடு, பெப். 27*

*இந்த ஆட்சி முறையாக நடக்கிறதா என்பதை எடைபோடும் ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தலில், வாக்காளர்கள் நல்ல தீர்ப்பு வழங்க வேண்டும் என முதல்வர் மு. க. ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்தார்.*

*ஈரோடில் அவர் பிரசாரம் செய்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.*

*சிறுபான்மை மக்களை அச்சுறுத்தும் குடியுரிமை திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக மாநிலங்களவையில் அ. தி. மு. க. வாக்களித்ததால்தான், அந்த சட்டம் நிறைவேறியது. இதை கவனத்தில்கொண்டு இத்தேர்தலில் அ. தி. மு. கவுக்கு சிறுபான்மை மக்கள் பாடம் புகட்ட வேண்டும்.*

*நாடும், மொழியும் காப்பாற்றப்பட வேண்டும் என்பதற்காக அமைந்த தி. மு. க. தேர்தல் கூட்டணி, கொள்கை கூட்டணியாகும். அதிமுக அமைத்துள்ள கூட்டணி எத்தகையது குறித்து என மக்களுக்கு தெரியும். இந்த தேர்தல் பிரசாரத்தில் பிரதமர் மோடி பெயரைக்கூட, பழனிசாமி சொல்லவில்லை. இந்த ஆட்சி முறையாக நடக்கிறதா என்பதை, எடைபோடும் இந்த இடைத்தேர்தலில், வாக்காளர்கள் நல்ல தீர்ப்பு வழங்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.*

# வடக்கில் நிலவும் பதவி வெற்றிடங்களுக்கு தென்னிலங்கையர்களை நியமிக்க முயற்சி!

யாழ்ப்பாணம், பெப். 27

**வடக்கு மாகாண சபையில் உள்ள சிற்றூழியர்கள் வெற்றிடங்களுக்கு சிங்கள ஊழியர்களை நியமிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று கூறப்படுகின்றது.**

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் காலத்தில் ஒரு இலட்சம் பேருக்கான வேலை வாய்ப்புத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டவர்களில் 100 பேர் வடக்கு மாகாண சபைக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இருப்பினும், வடக்கு மாகாண சபையில் சிற்றூழியர், தகைசார் பணியாளர் உட்பட சுமார் 1200 வெற்றிடங்கள் இன்னும் காணப்படுகின்றன. இந்த நிலையில், இந்த வெற்றிடங்களுக்கு தென்னிலங்கையை சேர்ந்த 1100 பேரை நியமிக்குமாறு வடக்கு மாகாண சபையால் கோரிக்கை முன்வைக்கப்படவுள்ளது என்று கூறப்படுகின்றது.

இதைத் தொடர்ந்து, தென்னிலங்கையை சேர்ந்த பெரும்பான்மை இனத்தவர்களை இந்தப் பதவிகளில் அமர்த்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்கள்.

வடக்கு மாகாணத்தில் பெருமளவானோர் வேலை வாய்ப்பின்றி உள்ளநிலையில் தென்பகுதி ஊழியர்கள் நியமிக்கப்படுவதற்கு தற்போது எதிர்ப்புகள் எழுந்துள்ளன. (ஐ)



# சந்நிதியான் ஆச்சிரமத்தால் நிதி, சைக்கிள்கள் அன்பளிப்பு

வடமராட்சி, பெப். 27

வடமராட்சி தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் 3 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாய் பெறுமதியான சைக்கிள்களும், ஒரு இலட்சம் ரூபாய் நிதியும் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

சந்நிதியான் ஆச்சிரமத்தால் வாராந்தம் உதவி திட்டங்கள் வழங்கப்படுகின்றன. இதில், கடந்த வெள்ளிக்கிழமை நடந்த நிகழ்வில், 7 மாணவர்களுக்கு சைக்கிள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன.

இதேபோன்று, மிருசுவில் - பத்திரகாளி அம்மன் ஆலயத்துக்கு 3ஆம் கட்டமாக விக்கிரகங்கள் கொள்வனவுக்காக 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது.

கிளிநொச்சி தமிழ் சங்கத்தின் அனுசரனையில் இடம்பெறும் நடனமயில் போட்டிக்காக 2ஆம் கட்டமாக 50 ஆயிரம் ரூபாய் அளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள், ஆச்சிரம தொண்டர்கள், பக்கர்கள் நலன்விரும்பிகள், பயனாளிகள் என பலர் கலந்து கொண்டனர். (ஐ-2)

# பேருந்துகளின் போட்டியால் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் பலி!

வவுனியா, பெப். 27

இலங்கை போக்குவரத்து சபை, தனியார் பேருந்துகள் போட்டிக்கு ஓடியபோது சைக்கிளில் சென்றவரை தனியார் பேருந்து மோதியதில் ஒருவர் உயிரிழந்தார்.

வவுனியா, ஏ -9 வீதி, மூன்று முறிப்பு பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் 40 வயதான 3 பிள்ளைகளின் தந்தை ஒருவர் படுகாயமடைந்தார். உடனடியாக அவர் வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அங்கு அவர் மரணமானார்.

இந்த விபத்து தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)



# வாள்வெட்டு குழுவின் உடைகளுடன் கோயிலாக்கண்டியில் கார் மீட்பு!

கொழும்பு, பெப். 27

நாவற்குழி - கோயிலாக்கண்டி பற்றைப் பகுதியில் இருந்து சாவகச்சேரி பொலிஸாரால் மீட்கப்பட்ட காரிலிருந்து வாள்வெட்டுக் குழுவினர் அணிந்திருந்த உடைகள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த வாரம் நாவற்குழி பகுதியில் உள்ள தனியார் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கார் ஒன்றிற்கு கியூ. ஆர். குறியீடு இன்றி எரிபொருள் நிரப்ப மறுத்த ஊழியரை இருவர் வாளால் வெட்டி காயப்படுத்தினர்.

இது தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்த சாவகச்சேரி பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய காரை பூட்டப்பட்ட நிலையில் பற்றைப் பகுதியிலிருந்து மீட்டிருந்தனர்.

இதன் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்ற உத்தரவை பெற்று காரின் கதவை உடைத்து சோதனை செய்த போது வாள்வெட்டுக் குழுவினர் அணிந்து வந்த இரண்டு ஆடைகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த கார் மிகிந்தலை பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு சொந்தமானது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மக்களுக்காக குருதி தானம் செய்ய அரசாங்க ஊழியர்களுக்கு அழைப்பு

## யாழ். மாவட்ட அரச அதிபர் விடுத்தார்

யாழ்ப்பாணம், பெப். 27

யாழ். மாவட்டத்தில் குருதித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது எனவும் அரச பணியாளர்கள் குருதிக்கொடை செய்ய முன்வரவேண்டும் என்று யாழ். அரச அதிபர் அ. சிவபாலசுந்தரன் அழைப்பு விடுத்துள்ளார்.

அத்துடன், அரச உத்தியோகத்தர்கள் தமது அலுவலகப் பணிகளுக்கு அப்பாலும் பொது மக்களுக்கான மனிதாபிமான பணிகளை ஆற்றுவதற்கு முன்வரவேண்டும். மக்களுக்கு நேர்மையான முறையில் பணியாற்றுவதன் மூலமே சேவையில் இருந்து ஓய்வுபெறும் போது மனத் திருப்தியுடன் செல்லமுடியும்.

நெருக்கடியான காலகட்டங்களில் சமூகப் பொறுப்பை உணர்ந்து பணியாற்றக்கூடிய மன நிலை அரச உத்தியோகத்தர்களுக்கு இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ள அவர், தற்போது யாழ். மாவட்டத்தில் குருதித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அரச பணியாளர்கள் குருதிக்கொடை செய்ய முன்வரவேண்டும்.



வட மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தால், அரச உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறண் தடைகாண் பரீட்சைக்கான வழிகாட்டல் செயலமர்வு நல்லூர் பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் பங்கேற்று பேசியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், அரச உத்தியோகத்தர்கள் அலுவலக நேரங்களில் மக்கள் சேவையில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். உத்தியோகத்தர்கள் அலுவலகங்களில் வீண் பொழுது போக்குகின்றார்கள் என்ற எண்ணம் மக்கள் மனங்களில் ஏற்படக்கூடாது. அலுவலகத்துக்கு வருகின்ற வயோதிபர்கள் விடயத்தில் கூடிய கவனம் எடுக்கவேண்டும்.

அரச பணிக்கு வருகின்ற அனைவரும் ஏதோ ஒரு துறையில் படித்தவர்கள். அவர்கள் பண்பாக செயல்பட வேண்டும். பொதுமக்கள் மனங்களில் இடம்பிடிக்கத்தக்க செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும். அலுவலக உத்தியோகத்தர்களோ ஆசிரியர்களோ வேறேந்த துறைசார்ந்தவர்களோ தமது பணியுடன் மட்டும் நின்றுவிடாமல் மக்களுக்கான மனிதாபிமான செயற்பாடுகளிலும் ஈடுபடவேண்டும்.

யாழ். மாவட்டத்தில் குருதிக்கு தட்டுப்பாடு உள்ளது. இதனால், நாம் மற்றவர்களிடம் கையேந்த வேண்டிய நிலை ஏற்படக்கூடாது. யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச உத்தியோகத்தர்கள் குருதிக்கொடை செய்வதற்கு முன்வரவேண்டும். வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் இப்பணியை மேற்கொள்ள வேண்டும். மக்கள் சேவை மகேசன் சேவை என வாய்வழியாகக் கூறிவிட்டு இருக்காமல் அதை செயலில் காட்டவேண்டும் - என்றார். (ஐ)

# பழைய சஞ்சிகைகள் வழங்குமாறு ஆசிரியர் கலாசாலை கோரிக்கை!

யாழ்ப்பாணம், பெப். 27

கோப்பாய் ஆசிரிய கலாசாலையால் வெளியிடப்பட்ட கலைமலர் சஞ்சிகையின் பிரதிகள் இருப்பின் கலாசாலை நூலகத்துக்கு வழங்கி உதவுமாறு கலாசாலையின் அதிபர் கோரியுள்ளார்.

கலாசாலை நூற்றாண்டைக் காணும் தருணத்தில் கலாசாலையுடன் தொடர்புடைய வெளியீடுகளை ஆவணப்படுத் தும் நோக்கில் இந்த உதவியை மேற் கொள்ளுமாறு கலாசாலையில் கற்ற முன்னாள் ஆசிரியர்கள் மற்றும் ஆர்வலர்களிடம் அதிபர் இந்தக் கோரிக் கையை விடுத்துள்ளார்.

1923இற்கும் 1974இற்கும் இடைப்பட்ட காலத்தில் வெளிவந்த வெளியீடுகள் பற்றிய தரவுகளோ அல்லது நூல்ஷகளோ கலாசாலை நூலகத்தில் இல்லை எனவும் அத்துடன் கலைமலர் 18, கலை மலர் 19 (1977 - 1978) கலைமலர் 22 (1981) கலைமலர் 28, கலைமலர் 29, கலைமலர் 30 (1990 - 1998 இடையில்) கலைமலர் 34 (2002) ஆகிய கலைமலர் சஞ்சிகைகள் கலாசாலை நூலகத்தில் இல்லை எனவும் குறிப்பிட்ட அவர், இந்தப் பிரதிகள் எங்காவது இருப்பின் கலாசாலைக்கு (021 2230323 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு) அறியத் தந்தால் அவற்றை வந்து பெற்றுக் கொள் வதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# மொறட்டுவை வெடி விபத்தில் கணவன் - மனைவி படுகாயம்!

கொழும்பு, பெப். 27

குப்பைக்கு தீ வைத்தபோது ஏற்பட்ட வெடிவிபத்தில் தம்பதியர் காயமடைந்து களு போவில போதனா மருத்துவம னையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மொறட்டுவை - கல்தெ முல்லை பிரதேசத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வேளை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த தம்பதியின் மகள் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல் கிசை பொலிஸார் தெரிவித்தனர்.

முறைப்பாட்டாளரின் தாயும் தந்தையும் தமது வீட் டுக்கு அருகில் உள்ள குப்பை மேட்டில் குழி தோண்டி தீ வைத்ததாகவும், அங்கு பெரும் வெடிப்பொன்று இடம்பெற் றுள்ளதாகவும் இதில் இருவரும் படுகாயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் கல் கிசை பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்ற னர். (ஐ)

# நெடுந்தீவில் சமூகசேவையில் நடிகர் சத்யராஜின் மகளும்!



சென்னை, பெப். 27

நெடுந்தீவில் சமூக சேவை யில் ஈடுபடும் தன் மகளை நடிகரும் தமிழ் உணர்வாளரு மான சத்யராஜ் பாராட்டியுள் ளார். இது தொடர்பில் அவரின் பதிவு ஒன்றில்,

“இலங்கையில் உள்ள வடக்கு மாகாண பகுதியில் அமைந்திருக்கும் நெடுந்தீவில் பசுமைப்பள்ளி, பசுமைச் சமூதாயம் என்ற பெயரில் ஈழத்து காந்தி என அழைக் கப்படும் தந்தை செல்வாவின் பேர்த்தியாகிய பூங்கோதை சந்திரகாசனும், என் மகள் திவ்யா சத்தியராஜும் இணைந்து, ஓர் அற்புதமான திட்டத்தை தொடங்கியுள்ள னர். இதில் நான் மிகவும் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறேன். அந்த திட்டத் தில் பல பயனுள்ள விசயங்கள் அடங்கியிருக்கின்றன.

முதலாவது குழந்தைகளின் கல்வி, எதிர்காலம், விவசாயம் என்ற ஒரு அற்புதமான தொழிலை கற்றுக்கொள்வது, அதில் அந்தக் குழந்தைகளின் பெற்றோர்களையும் ஈடுபடச் செய்து எதிர்காலத்தில் அவர் கள் நல்ல தொழிலை கற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு என அவ்வளவு நல்ல விசயங்களும் அடங்கியிருக்கின்றன. இது இந்தநேரத்தில் மிகவும் பய னுள்ள, மிகவும் அவசியமான, சிறப்பான ஒரு சமூகப் பணி யாகும். இந்தப் பணியை பூங்கோதை சந்திரகாசனும் எனது மகள் திவ்வியா சத்திய ராஜூம் இணைந்து செயல் படுவதை நினைக்கும் போது, எனக்கு புரட்சித் தலைவர் அவர்களின் ஒரு பாடல் வரி நினைவுக்கு வருகிறது. “நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி இந்த நாடே இருக்குது தம்பி சின்னஞ் சிறு கைகளை நம்பி ஒரு சரித் திரம் இருக்குது தம்பி.” ஈழத் தமிழர்களின் நலனுக்காக என்மகள் திவ்வியா சத்தியராஜ் தொடர்ந்து உழைப்பார் - என்று கூறியுள்ளார். (ஐ)

# காட்டுயானைகள் கூட்டத்தால் கிளிநொச்சி மக்கள் பாதிப்பு!

கிளிநொச்சி, பெப். 27

கண்டாவளை பிரதேச செய லாளர் பிரிவுக்கு உட்பட்ட கல் மடு நகர் பகுதியில் தொடரும் காட்டு யானைகளின அச்சுறுத் தல் காரணமாக தாங்கள் பெரி தும் பாதிக்கப்படுவதாக பிர தேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் தினமும் மக்கள் குடியிருப்புக்குள் காட்டு யானை புகுந்து, மக்களின் வாழ் வாதாரத்தை அழித்து வருவது டன், கடந்த இரண்டு நாட்க ளுக்கு முன் வீட்டுத் தளபாடம் மற்றும் வீடொன்றின் கூரை என்பனவற்றை உடைத்துச் சென்றுள்ளது.

அத்துடன், வாழ்வாதாரத் துக்காக வைக்கப்பட்ட 24 தென்னை மரங்கள், 1/2 ஏக்கர் வாழைச்செய்கை என்பவற்றை யும் யானைகள் அழித்துள்ளன என்று அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக இப்பகுதி கல்மடு நகர் கிராம அலுவலருக்கு தெரிவித்திருந்த போதிலும் அவர் அப்பகுதிக்கு சென்று சேதங்களை பார்க்க வில்லை என்றும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், தமது பகுதி களில் தொடர்ச்சியாக காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்த வண்ணம் உள்ளதாக வும், இது தொடர்பாக எந்த வோர் அதிகாரியும் கவனம் செலுத்தவில்லை என்றும் தெரி வித்துள்ளனர்.

அத்துடன் இது தொடர் பாக வனஜீவராசிகள் திணைக் களம் மற்றும் எமது பகுதியின் கிராம அலுவலர், சம்பந்தப் பட்ட அதிகாரிகள் எமது தற்காலிக பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் யானை களை விரட்டும் வெடிகளை வழங்குமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# நலன்புரி நன்மைகளை நிறுத்த அரச ஊழியர்கள் கடும் எதிர்ப்பு!

**கொழும்பு, பெப். 27**

**சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனையின்படி, மக்களுக்கான நலன்புரி நன்மைகளை நிறுத்துவதற்கு அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு அரச உத்தியோகத்தர்கள் மத்தியில் எதிர்ப்புகள் எழுந்துள்ளன.**

நலன்புரி நன்மைகளை பெறுவதற்கு தகுதியான நபர்களை அடையாளம் காண் பதற்கான செயல்திட்டத்தை ஆரம்பித்துள்ளதாக அரசாங்கம் அண்மையில் அறிவித்தது.

சமுர்த்தி கொடுப்பனவு களை வசதியானவர்களும் பெறுகிறார்கள், அதனால் கொடுப்பனவை பெற வேண்டி யவர்கள் காத்திருப்பு பட்டிய லில் உள்ளனர். எனவே, கொடுப்பனவு தேவையானவர் களை அடையாளம் காணும் நடவடிக்கையென அரசாங்கம் இந்த நடவடிக்கையை ஆரம் பித்தது.

இந்த நடவடிக்கை மூலம், சமுர்த்தி கொடுப்பனவு பெறுப வர்களின் எண்ணிக்கையை குறைப்பதே நோக்கமாகும். வீடு வீடாக செல்லும் உத்தியோ கத்தர்கள் இணைய வசதி யூடாக விண்ணப்பங்களை பூர்த்தி செய்யவும், ஒரு விண்ணப்பத்தை பூர்த்தி செய்வ தற்கு 180 ரூபாய் வழங்கப்படு மென குறிப்பிடப்பட்டிருந்தது.

எனினும், இந்த நடவடிக் கைக்கு நாடு முழுவதும் கிராம சேவகர்களும், சமுர்த்தி உத்தி யோகத்தர்களும் ஒத்துழைக்க மறுத்துள்ளனர்.

இதையடுத்து, அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பயன் படுத்தி மீளாய்வு நடவடிக்கை கயை முன்னெடுக்க அரசாங்கம் முயன்றது. எனினும், அபிவி ருத்தி உத்தியோகத்தர்களும் அதற்கு ஒத்துழைக்கவில்லை.

நாடு முழுவதும் மிகச் சில பிரதேச செயலக பகுதிகளில் மட்டுமே இந்த நடவடிக்கை குழப்பமின்றி நடந்தன. பெரும்பாலான பிரதேச செயல கங்களில் குழப்பமான நிலைமையே நீடிக்கிறது.

ஒரு விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்தால் 300 ரூபா வழங்கப்படுமென அரசாங்கம் சலுகையை அதிகரித்துள் ளதுடன், ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர் அமைப்புக்களின் மூலம் மீளாய்வு நடவடிக் கையை முன்னெடுக்க அரசு முயற்சித்து வருகிறது.

கடமையிலுள்ள அரச உத்தி யோகத்தர்களை தவிர்த்து, பிற தரப்பினரின் மூலம் மேற்கொள் ளப்படும் இந்த நடவடிக்கை எவ்வளவு வெளிப்படையாக இருக்கும், சரியான பயனாளி கள் தெரிவு செய்யப்படுவார்கள் என்ற சந்தேகமும் எழுப்பப் பட்டு வருகிறது. (ஐ)

# எம் கடல் வளத்தை கொடுத்தால் மாகாணங்களை முடக்குவோம்!

## இலங்கை சமூகங்களின் கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், பெப். 27

வாழ்வாதாரத்தை பாதிக்கும் வகையில் எமது கடலை அந்நிய நாட்டுக்கு தாரை வார்க் கும் பட்சத்தில் மாகாணங்கள் மற்றும் தொழில்களை முடக்கி போராட்டத்தில் ஈடுபடுவோம் என்று அகில இலங்கை சமூகங் களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் எம். பி. சுப்பிர மணியம் தெரிவித்துள்ளார்.

வட பகுதியிலுள்ள மீன வர்கள் கடும் துயரை எட்டி யுள்ளார்கள். இந்நிலையில், ஏகாதிபத்திய அரசாங்கம் அடக்கி ஒடுக்கி தமிழ் மக்களை நசுக்கி இனத்தை அளிக்கும் வேலை திட்டத்தை தொடர்ந் தும் மேற்கொள்கின்றது.

எம்முடைய கடலை அந்நிய நாட்டுக்கு தாரைவார்த்து தொழில் செய்யமுடியாதவாறு வாழ்வாதாரத்தை சுருக்கி பட்டினிச்சாவை தழுவ செயல் பாடுகள் முன்னெடுக்கப்படு கின்றன. எமது கடல்வளத்தை இந்தியாவுக்கு கொடுத்தால் நாம் மாகாணங்கள் தழுவிய ரீதியில் போராட்டங்களை மேற்கொள்வோம் - என்றும் அவர் கூறினார். (ஐ)

# நல்லிணக்கத்தை குலைப்போரை எமது அரசாங்கம் தண்டிக்கும்!

## சஜித் முல்லைத்தீவில் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 27

நாட்டில் இன , மதவாதங் களை ஏற்படுத்தி நல்லிணக் கத்தை சீர்குலைக்கும் அனைவ ருக்கும் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் சட்ட நடவ டிக்கை எடுக்கப்படும். பாராளு மன்றத்தில் நாடகத்தை அரங் கேற்றி கொண்டிருக்காமல் தேர்தலை நடத்துவதற்கான நிதியை வழங்குமாறு ஜனாதி பதியை வலியுறுத்துவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

முல்லைத்தீவில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ராஜபக்ஷ ஆட்சி காலத்தில் வடக்கின் வசந்தம் எனக் கூறி னர். ஆனால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நான் வடக் கின் வசந்தத்தை அவதானிக்க வில்லை. வடக்குக்கும் , தெற் குக்கும் முழு நாட்டுக்கும் ராஜ பக்ஷக்கள் வழங்கிய பரிசப் பொதி இனவாதமும் , இனபேத மும் , மதவாதமும் , மதபேத மும் வங்குரோத்து அடைந்த இலங்கையுமாகும்.

ஒவ்வொருவரும் தாமே தேசப்பற்றுடையவர்கள் எனக் கூறிக் கொண்டிருக்கின்றனர். ஆனால், அனைவரும் ஒரே சேற்றில்தான் புரண்டு கொண்டிருக்கின்றனர். யுத்தம் நிறைவடைந்துள்ள போதிலும் , நல்லிணக்கம் சென்ற சொற்ப தம் தீய சொல்லாகவே பார்க் கப்படுகிறது. ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் இன, மதவா தங்களைத் தூண்டும் அனை வரையும் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்கு வோம்.

நான் கூறும் இந்த விடயம் அனைத்து இனங்களுக்கும் பொதுவானதாகும். யானை, காகம் , மொட்டு அரசாங்கத் தில் நாட்டில் தேர்தல் இல்லை என்று ஜனாதிபதி கூறுகின்றார்.

அரசமைப்பில் உறுதிப்படுத் தப்பட்டுள்ள மக்களின் வாக் களிக்கும் உரிமையில் எவரா லும் கை வைக்க முடியாது. அதே நிறைவேற்றதிகார ஜனாதிபதிக்கும் அந்த அதி காரம் கிடையாது. பாராளு மன்றத்தில் முன்மொழியப் பட்டமைக்காக தேர்தல் ஆணைக்குழுவை மாற்ற முடி யுமா?

வேட்புமனு தாக்கல் இடம்பெற்று , தேர்தல் நடவ டிக்கைகள் முன்னெடுக்கப் பட்டு வரும் சந்தர்ப்பத்தில் தேர்தல் காலம் தாழ்த்தப்பட் டுள்ளமைக்காக ஆணைக்குழு வின் உறுப்பினர்களை மாற்று வதற்கும் எவருக்கும் அதிகாரம் கிடையாது.

எனவே, பாராளுமன்றத்தில் நாடகத்தை அரங்கேற்றிக் கொண்டிருக்காமல் தேர்தலை நடத்துவதற்கான நிதியை வழங்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்துகின்றோம். சதித்திட்டங்கள் ஊடாக மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் சகலருக்கும் எமது ஆட்சியில் நிச்சயம் தண்டனை வழங்கப்படும் - என்றார். (ஐ)

# நிலநடுக்கத்தை உணர்ந்த உடனேயே கட்டடங்களை விட்டு வெளியேறுங்கள்!

## கொழும்பு வாழ் மக்களுக்கு அறிவுறுத்து

கொழும்பு, பெப். 27

**இந்தியாவின் வடக்கில் இமாலய பிரதேசத்தில் நில நடுக்கம் ஏற்படக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. அவ்வாறு அப்பகுதியில் நில நிடுக்கம் ஏற்பட்டால் அதன் தாக்கத்தை கொழும்பிலும் உணரக் கூடியதாக இருக்கும். எனவே, நில அதிர்வுகள் உணரப்பட்டால் உயர் கட்டடங்களில் இருப்பவர்கள் உடனடியாக வெளியேறி விடவேண்டும் என்று சிரேஷ்ட புவியியல் பேராசிரியர் அதுல சேனாரத்ன தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ,

கடந்த வாரம் புத்தல பிரதேசத்தில் சில நில அதிர்வுகள் பதிவாகியுள்ளன. இலங்கையின் பிரதான புவியியல் நில தட்டுக்களுக்கிடையிலான எல்லையிலேயே இந்த அனைத்து நில அதிர்வுகளும் பதிவாகியுள்ளன.

இவை பல மில்லியன் ஆண்டுகளாகக் காணப்படுபவையாகும். அத்தோடு இவை முன்னைய காலங்களில் செயல்திறன் கொண்டவையாகக் காணப்பட்டிருக்கலாம் என்று 1984இல் சிரேஷ்ட புவியியலாளர் பேராசிரியர் சி. பி. திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ள வரிபடத்தை அவதானிக்கும் போது அவை புவியியல் நில தட்டுக்களுக்கிடையிலான எல்லையிலேயே பதிவாகியுள்ளமையை தெளிவாக அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இந்தியாவின் வடக்கில் இமாலய பிரதேசத்தில் 8 ரிச்டர் அளவில் நில நடுக்கம் பதிவாகக் கூடும் என அந்நாட்டு புவிசரிதவியல் திணைக்களமொன்று தெரிவித்துள்ளது. அதற்கமைய இமாலய பிரதேசத்தில் நில நடுக்கம் ஏற்பட்டால் அது எவ்வாறு இலங்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று பலரும் கேள்வியெழுப்பியுள்ளனர். அவ்வாறு நில நடுக்கம் ஏற்பட்டால் அதனை இலங்கையில் குறிப்பாக கொழும்பில் உணர முடியும்.

எனவே, எதிர்பாராத விதமாக அவ்வாறு நிலநடுக்கம் எதனையும் உணர்ந்தால் உயர் கட்டடங்களில் தொழில் புரிபவர்கள் உடனடியாக அவற்றிலிருந்து வெளியேறிவிட வேண்டும்.

ஒரு சில செக்கன்களுக்கு மாத்திரமே நில அதிர்வுகள் ஏற்படும். எனவே பெரும் கட்டடங்களிலிருந்து வெளியேறுவதற்கு அந்த நேரம் போதுமானதாக இருக்காது. எனவே இது தொடர்பில் அனைவரும் அவதானமாக செயல்பட வேண்டும் - என்றார். (ஐ)

# போதைப் பொருளுடன் 15 இளைஞர்கள் கைது!

ஹற்றன், பெப். 27

சிவனொளிபாத மலையில் ஏறுவதற்கு பல்வேறு வகையான போதைப்பொருட்களுடன் வந்த 15 இளைஞர்கள் கடந்த இரு நாட்களுக்குள் ஹற்றன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட போதை ஒழிப்பு பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஹற்றன் ரயில் நிலைய வளாகத்தில் கடந்த இரு நாட்களில் நடத்தப்பட்ட சோதனையிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு, காலி, அநுராதபுரம் மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 20 முதல் 30 வயதுக்குட்பட்ட இளைஞர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது ஹெரோயின், கஞ்சா, கஞ்சா கலந்த புகையிலை தூள் மற்றும் சட்ட விரோதமாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட சிகரெட்கள் என்பன கைதான இளைஞர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர்களை நாளைய தினம் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# ஜே. வி. பி. தலைவர் உட்பட 26 பேர் போராட்டங்களில் பங்கேற்க தடை!

கொழும்பு, பெப். 27

தேசிய மக்கள் சக்தியின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க உள்ளிட்ட 26 பேர் நேற்று ஞாயிற்றுக்கிழமை போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவதை தடுக்கும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

நேற்று பிற்பகல் 1 மணி முதல் இரவு 8 மணி வரையில் கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வீதிகளில் பயணிக்கும் வாகனங்களுக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டாம் என கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப் பித்திருந்தது.

ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, நிதியமைச்சு மற்றும் காலிமுகத்திடல் வளாகம் உள்ளிட்ட வீதிகளுக்குள் பிரவேசிப்பதை தவிர்க்குமாறும் நீதிமன்றம் போராட்டக்காரர்களுக்கு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# உள்ளூராட்சி மன்ற எல்லை நிர்ணய குழு அறிக்கை நாளை பிரதமரிடம் வழங்கப்படும்!

## மகிந்த தேசப்பிரிய அறிவிப்பு



கொழும்பு, பெப். 27

உள்ளூராட்சி மன்றங்களுக்கான எல்லை நிர்ணய குழுவினால் தயாரிக்கப்பட்டுள்ள இடைக்கால அறிக்கை நாளை செவ்வாய்கிழமை பிரதமர் தினேஷ் குணவர்த்தனவிடம் கையளிக்கப்படவுள்ளதாக எல்லை நிர்ணய குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

எல்லை நிர்ணய குழு மாவட்ட மட்டத்தில் பெற்றுக்கொண்ட பரிந்துரைகள் , வெவ்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்டுள்ள ஏனைய பரிந்துரைகள் மற்றும் தமது முன்மொழிவுகள் என்பவற்றைப் பரிசீலனை செய்து மாவட்ட மட்டத்திலான எல்லை நிர்ணய பணிகள் இடம்பெற்று வருகின்றன.

மாவட்டங்களுக்கு சென்று அறிக்கைக்கு தேவையான பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமைய மார்ச் 31ஆம் திகதிக்குள் எல்லை நிர்ணயம் தொடர்பான இறுதி அறிக்கையை சமர்ப்பிக்க எதிர்பார்க்கப்படுகிறது.

25 மாவட்டங்களில் 15 மாவட்டங்களின் செயல்பாடுகள் முழுமையாக நிறைவடைந்துள்ளன. மேலும் 6 மாவட்டங்களின் செயற்பாடுகள் 80 சதவீதம் நிறைவடைந்துள்ளன. ஏனையவற்றில் இரு மாவட்டங்களின் செயல்பாடுகள் மாத்திரமே 50 சதவீதத்தையும் விடக் குறைவாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

எனவே, எமது முழுமையான அறிக்கையை எதிர்வரும் மார்ச் 25 - 31ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் தயாரித்து சமர்ப்பிக்கவும் , இடைக்கால அறிக்கையை அடுத்த வாரம் சமர்ப்பிப்பதற்கும் தீர்மானித்துள்ளோம். அதற்கமைய தற்போதுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையை 8800இலிருந்து , 5100 அல்லது 4900 வரை குறைக்க முடியும் என்று நம்புகின்றோம் - என்றார். (ஐ)

# இந்தியாவிலிருந்து முட்டை இன்று நாட்டை வந்தடையும்!

## வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ

கொழும்பு, பெப். 27

இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளின் முதல் தொகுதி இன்று நாட்டை வந்தடையும் என்று வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தால் முதல் தொகுதி முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. முதல் தொகுதியின் ஒரு பகுதியாக இந்தியாவில் இருந்து 20 இலட்சத்துக்கும் அதிகமான முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை, முட்டை இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள விசேட சரக்கு வரியில் திருத்தம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சினால் முட்டை இறக்குமதிக்கு விதிக்கப்பட்டிருந்த 50 ரூபாய் விசேட சரக்கு வரியானது இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தால் பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ரூபாய் 1 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

இந்த வரித் திருத்தங்கள் மூன்று மாத காலத்துக்கு அமுலில் இருக்கும் என அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# மின் கட்டண அதிகரிப்பால் மலையகம் இருளில் மூழ்கும்!

## வேலுகுமார் எம். பி.

ஹற்றன், பெப். 27

நாட்டு மக்கள் பொருளாதார நெருக்கடிகளால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். குறிப்பாக, தோட்டத் தொழிலாளர்களுக்கு ஒரு நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாய்கூட கிடைப்பதில்லை. இந்நிலையில் தற்போது மின் கட்டணமும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் அன்றாட வாழ்க்கைச் செலவை கொண்டு நடத்த முடியாத மக்களால் அதிகரித்த மின்கட்டணத்தை செலுத்த முடியாமல் போகும் நிலை உருவாகும். அப்போது மலையகமே முதலில் இருளில் மூழ்கும் என எதிர்க்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

பொருளாதார நெருக்கடிகள் காரணமாக அதிக அளவில் மலையக மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். ஒருநாள் அடிப்படை சம்பளமாக ஆயிரம் ரூபாய் கூட பல பகுதிகளில் கிடைப்பதில்லை. இன்று வாழ்க்கைச் செலவு பன்மடங்கு அதிகரித்துள்ளது. மின்சார கட்டணம் அதிகரித்துள்ளது. நகரப்பகுதியில் உள்ள பணக்காரர்கள்கூட மின் கட்டண உயர்வால் திண்டாடுகிறார்கள். அவர்களின் நிலைமையோ இவ்வாறு இருக்க தோட்ட தொழிலாளர்களின் நிலைமை என்ன என்பது தொடர்பில் நாம் சிந்தித்து பார்க்க வேண்டும்.

எவ்வாறு மின்சார கட்டணத்தை செலுத்துவார்கள்? அதிகரித்த மின்கட்டணத்தை செலுத்த முடியாமல் மலையகமே முதலில் இருளில் மூழ்கும் என்பது உறுதியாகும். நாம் எதிர்க்கட்சியில் அமர்ந்துள்ளோம். அரசியல் ரீதியாக பலமிழந்துள்ளோம். ஆனால், இன்று அரசாங்கத்தில் சிறுபான்மை சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் இருக்கிறார்கள். அரசாங்கத்துக்கு இவர்களால் அழுத்தம் பிரயோகிக்க முடியும். ஆனால், பதவிகளில் இருப்பவர்கள் மௌனமாக இருக்கிறார்கள். இருப்பினும், எதிர்க்கட்சி என்ற வகையில் தொடர்ச்சியாக நாங்கள் அரசாங்கத்துக்கு அழுத்தத்தை கொடுக்கிறோம்.

அதேவேளை, அதிகாரத்தில் உள்ள எந்தவொரு அரசாங்கமும் இனவாதத்தை அடிப்படையாக கொண்டே செயற்படுகின்றது. அதாவது அதிக அந்நிய செலாவணியை பெற்றுத் தருகின்ற பெருந்தோட்டத் துறை காணப்பட்ட போதிலும், அதனை கண்டுகொள்வதாக இல்லை. இதை பார்க்கும் போது சகல அரசாங்கங்களும் இனவாதத்தை அடிப்படையாக கொண்டு செயற்படுகின்றன என்றே கூறலாம்.

மக்களுக்கு உயிர் வாழ்வதற்கு உணவில்லை, மருந்து இல்லை, மின்சாரம் இல்லை, அடிப்படை வசதிகள் கூட இல்லை என்றால் அடுத்த கட்டமாக மக்கள் சுயாதீனமாக வீதிக்கு இறங்கி போராடுவார்கள்.

எதிர்காலத்தில் மக்கள் போராட்டம் எழப் போகிறது. இந்த போராட்டங்களின் விளைவு பாரதூரமானதாக காணப்படும். ஆனால், இது போன்றதொரு மிக மோசமான நிலை ஏற்பட்டுவிடக்கூடாது. இதன் காரணமாகவே நாங்கள் அரசாங்கத்திடம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம் - என்றார். (ஐ)

# 109 வயது பாம்பன் ரயில் பாலத்துக்கு பிரியாவிடை: பாதுகாப்பு கருதி ரயில் சேவை நிறுத்தம்

பிரபுராவ் ஆனந்தன்



ராமேஸ்வரம் அருகே கடலின் குறுக்கே அமைந்துள்ள 109 வயதான பாம்பன் பழைய தூக்கு பாலத்தில் ரயில் போக்குவரத்து திடீரென நிறுத்தப்பட்டதால் ராமேஸ்வரம் வரும் சுற்றுலா பயணிகள் மற்றும் உள்ளூர் மீனவ மக்கள் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

உடனடியாக பாம்பன் ரயில் பாலத்தில் ரயில் சேவையை துவக்க வேண்டும் என வலுவான கோரிக்கை எழுந்துள்ளது.

தமிழ்நாட்டுக்கு பெருமை சேர்க்கும் விஷயங்களில் ஒன்று பாம்பன் ரயில் பாலம். இந்த ரயில் பாலம் தமிழ்நாட்டின் பெருநிலப் பரப்பையும் ராமேஸ்வரம் தீவையும் இணைக்கும் மிக முக்கிய பங்காற்றி வருகிறது. இது இந்தியாவின் முதல் கடல் பாலம். சுமார் 2.3 கி.மீ. நீளம் கொண்ட இப்பாலம் இந்தியாவின் இரண்டாவது மிக நீளமான கடல் பாலம் என்ற பெருமையை கொண்டது.

பாம்பன் ரயில் பாலத்தின் நடுவே பெரிய கப்பல்கள் சென்று வருவதற்கு ஏற்றவாறு பாலத்தின் நடுவில் கத்திரி வடிவ தூக்கு பாலம் வடிவமைக்க பட்டு செயல்பட்டு வருகிறது.

தொடக்கத்தில் மீட்டர் கேஜ் ரயில் பாதையில் ரயில்கள் சென்று வருவதற்கு ஏற்றவாறே கட்டப்பட்டது. பின்னர் 2007 ஆம் ஆண்டு இந்திய ரயில்வே பாம்பன் ரயில் பாலத்தை புதுப்பித்து அகல ரயில் பாதையாக மாற்றி தற்போது 110வது ஆண்டில் பாம்பன் பாலம் அடியெடுத்து வைத்துள்ளது.

**பாம்பன் பாலம் கட்டப்பட்ட வரலாறு**

ஆங்கிலேயர்களால் 1854ல் 80 அடி அகலம், 14 அடி ஆழம், 4,400 அடி நீளத்திற்கு கால்வாய் வெட்டப்பட்டது. இந்த வழியாக 200 டன் எடையுள்ள கப்பல்கள், சிறிய ரக போர் கப்பல்கள் சென்று வந்தன.

கடந்த 1876ல் ஆங்கிலேயர்கள் இந்தியா இலங்கை இடையே போக்குவரத்திற்கான இணைப்பை ஏற்படுத்த முடிவு செய்தனர். பாம்பன் கடல், தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையில் ஆடம்ஸ் பிரிட்ஜ் பகுதியில் பாலம் அமைத்து ரயில் போக்குவரத்து ஏற்படுத்த திட்டமிட்டனர்.

இதற்காக ஜெனரல் மன்றோ என்பவரால் ஆய்வு நடத்தப்பட்டது. இத்திட்டம் ஆய்வு நிலையில் கைவிடப்பட்டது. சென்னை டெபுடி ஜெனரல் ரைட்சன் என்பவரால் 'டுவின்ஸ் ரயில் பெர்க்கி சர்வீஸ்' என்ற திட்டம் தயாரிக்கப்பட்டது.

அப்போது 229 லட்சம் செலவில் திட்டத்தை செயல்படுத்த பிரிட்டிஷ் அரசின் அனுமதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், இது அதிக தொகை என்பதால் இத்திட்டம் கைவிடப்பட்டது.

இறுதியாக கீழே கப்பல், மேலே ரயில் செல்லும் வகையில் 1899 ல் 'டபுள் லீப் கேண்டிலிவர் பிரிட்ஜ்' பாலம் கட்டுவதற்கு முடிவு செய்யப்பட்டது. இதற்காக 1902ல் ஆங்கிலேய அரசால் முறையான அறிவிப்பு வெளியிடப்பட்டது.

**கைவிடப்பட்ட திட்டம் மீண்டும் தொடக்கம்**

வர்த்தக போக்குவரத்திற்காக பாம்பன் கடலில் பாலம் கட்ட பிரிட்டிஷ் அரசு முடிவு செய்தது. இத்திட்டப்படி பாம்பன் கடலில் தூக்கு பாலம் மற்றும் தனுஷ்கோடி வரை ரயில் பாதை அமைக்க வேண்டும். அங்கிருந்து கப்பலில் செல்வதற்கு தனுஷ்கோடி மற்றும் தலைமன்னாரில் துறைமுகம் அமைக்க வேண்டும். இதற்காக 70 லட்சம் ஒதுக்கீடு செய்து பணிகளை துவங்கியது.

கடந்த 1902 முதல் பாலம் கட்டுவதற்கு அனைத்து பொருட்களும் இங்கிலாந்தில் இருந்து கப்பல்கள் மூலம் இந்தியாவிற்கு கொண்டு வரப்பட்டன. குஜராத்தை சேர்ந்த கட்ஜ்கரோலி குடும்பத்தார் பாலம் கட்டும் பணியில் ஈடுபட்டனர். இவர்களால் 10 ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு தடைகளை கடந்து கடலுக்குள் 144 தூண்களுடன் பாம்பன் பாலம் 1913ல் கட்டி முடிக்கப்பட்டது.

1914 பிப்ரவரி 24ல் பாம்பன் பாலத்தில் ரயில் போக்குவரத்தும், தனுஷ்கோடி தலைமன்னார் கப்பல் போக்குவரத்து தொடங்கப்பட்டது. கடலுக்குள் அமைக்கப்பட்ட 146 தூண்கள் ரயில் பாலத்தை தாங்கி நிற்கின்றன. இந்த தூண்கள் கட்ட 4 ஆயிரம் டன் சிமெண்ட் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**சென்சாரில் தொழில் நுட்ப கோளாறு**

பாம்பன் ரயில் பாலம் கட்டி நூறு ஆண்டுகளுக்கு மேல் ஆனதால் தென்னக ரயில்வே சார்பில் சென்னையில் உள்ள ஐஐடி குழுவினர் உதவியுடன் பாலத்தின் உறுதித்தன்மையை ஆய்வு செய்யும் வகையில், ரயில்கள் தூக்கு பாலம் வழியாக கடந்து செல்லும் போது அதிர்வுகளை கண்காணிப்பதற்காக நூற்றுக்கும் மேற்பட்ட சென்சார்கள் பொருத்தபட்டுள்ளன.

இந்நிலையில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 22ந்தேதி இரவு ராமேஸ்வரத்தில் இருந்து சென்னை நோக்கி சென்ற ரயில் பாம்பன் பாலத்தை கடந்து சென்றபோது அதிர்வுகள் அதிகம் இருந்ததாக அபாய ஒலி எழுந்துள்ளது.

இதையடுத்து பாதுகாப்பை கருத்தில் கொண்டு மறு உத்தரவு வரும் வரை பாம்பன் தூக்கு பாலம் வழியாக ரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் ராமேஸ்வரத்தில் இருந்து புறப்படும் ரயில்கள் மற்றும் ராமேஸ்வரம் நோக்கி வரும் ரயில்கள் அனைத்தும் மண்டபம் ரயில் நிலையத்தில் இருந்து இயக்கப்படுகின்றன.

பாம்பன் தூக்குப் பாலத்தை பொறியாளர்கள் ஆய்வு செய்து தொழில் நுட்ப கோளாறு சீர் செய்தனர்.

இருப்பினும் 109 ஆண்டுகள் பழமையான பாம்பன் ரயில் பாலத்தில் மீண்டும் ரயில் போக்குவரத்தை தொடங்கினால் விபத்துகள் ஏற்படலாம் என முன்னெச்சரிக்கையாக, பாதுகாப்பை கருத்தில் கொண்டு தேதி குறிப்பிடாமல் பாம்பன் ரயில் பாலத்தில் ரயில் சேவையை நிறுத்தியுள்ளது தென்னக ரயில்வே.

நூற்றாண்டு காலமாக பலரை சுமந்து ரயில் சேவையாற்றி வந்த பாம்பன் பாலத்தில் திடீரென ரயில்வே துறை ரயில் சேவையை நிறுத்தியது உள்ளூர் பொது மக்கள் மற்றும் வெளியூர் சுற்றுலா பயணிகள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

**சுற்றுலா பயணிகள் ஏமாற்றம்**

இதுகுறித்து கேரள மாநிலம் திருச்சூரில் இருந்து ராமேஸ்வரத்துக்கு சுற்றுலா வந்த சுற்றுலா பயணி ஒருவர் பேசுகையில், குடும்பத்துடன் ரயிலில் பாம்பன் பாலத்தில் பயணம் செய்ய வேண்டும் என்பதற்காக 4 மாதங்களுக்கு முன் ரயிலில் முன்பதிவு செய்திருந்தேன். ஆனால் கடந்த டிசம்பர் மாதத்தில் இருந்து பாம்பன் பாலம் வழியாக ரயில் சேவை நிறுத்தப்பட்டதாக தற்போது தான் எனக்கு தெரிய வந்தது.

பாம்பன் ரயில் பாலம் வழியாக பயணிப்பதற்காக குடும்பத்துடன் ஆவலுடன் வந்திருந்த நிலையில் போக்குவரத்து ரத்து செய்யப்பட்டது தெரிந்ததும் மிகவும் ஏமாற்றம் அடைந்தோம்.



இது என்னைப் போன்று ராமேஸ்வரம் சுற்றுலா வரும் சுற்றுலா பயணிகள் பலருக்கும் ஏமாற்றத்தை தந்துள்ளது. எனவே உடனடியாக புதிய பாலப் பணிகள் முடிவுற்று கடலின் அழகை ரசிப்பதற்கு ரயில் சேவையை ரயில்வே துறை மீண்டும் தொடங்க வேண்டும் என்றார்.

**மீனவர்கள் வாழ்வாதாரம் பாதிப்பு**

இது குறித்து மீனவ பெண் மேரி பேசுகையில், பாம்பன் ரயில் பாலம் வழியாக ரயில் சென்று கொண்டிருந்தபோது எங்களுடைய கருவாடு மற்றும் மீனை வெளி மாவட்டத்திற்கு குறைந்த விலையில் அனுப்ப மிகவும் வசதியாக இருந்தது.

மீன் மற்றும் கருவாடு வாசனை அதிகமாக இருப்பதால் பேருந்துகளில் அவற்றை ஏற்றுவதற்கு அனுமதிப்பதில்லை. எனவே எங்களுக்கு ரயிலில் அனுப்புவது மிகவும் எளிதாக இருந்தது. இந்நிலையில் கடந்த 50 நாட்களுக்கும் மேலாக ரயில் சேவை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் எங்களுடைய தொழில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

புதிய பால கட்டுமான பணி முடிந்து அதில் ரயில் சேவை துவங்குவதற்கு முன் பழைய பாலம் வழியாக ரயில்கள் இயக்கப்பட வேண்டும். அப்படி இயக்கப்பட்டால் மட்டுமே தீவு மீனவ மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாது என அவர் தெரிவித்தார்.

**"நினைவு சின்னமாக அறிவிக்க வேண்டும்"**

பாம்பன் ஊராட்சி மன்றத் தலைவர் பேட்ரிக் பேசுகையில், நூற்றாண்டு பழமையான பாம்பன் ரயில் பாலத்தில், தொழில்நுட்ப கோளாறு காரணமாக ரயில் சேவை நிறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் பாலத்தில் தொடர்ச்சியாக ரயில்கள் இயக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்துவருகிறோம்.

புதிய பாலம் கட்டும் பணிகள் நடைபெற்று வருவதால் பழைய ரயில் பாலத்தில் சேவை நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. புதிய பாலம் கட்டும் வரை பழைய ரயில் பாலத்தில் விரைவு ரயில்களை இயக்காமல் பயணிகள் ரயில்களை மட்டுமாவது இயக்கி ராமேஸ்வரம் வரக்கூடிய சுற்றுலா பயணிகள் மற்றும் மீனவர் மீனவர்களுக்கு உதவி செய்ய ரயில்வே நிர்வாகம் முன்வர வேண்டும்.

மேலும் பாம்பன் ரயில் பாலத்தின் நடுவே உள்ள தூக்கு பாலத்தை உடைத்து அகற்றுவதற்கான டெண்டர் விடப்பட்டுள்ளதாக செய்திகள் வாயிலாக அறிகிறோம். எங்களுக்கு இது மிகுந்த வேதனை அளிக்கிறது.

தமிழ்நாட்டின் அடையாளமாக இருக்கும் இந்த பாம்பன் தூக்குப்பாலத்தை அப்புறப்படுத்தாமல் நூற்றாண்டு நினைவு சின்னமாக அறிவித்து பாதுகாக்க வேண்டும் என்பது மக்கள் கோரிக்கை உள்ளது என்றார் பேட்ரிக்

**விரைவில் ரயில் சேவை**

பாம்பன் பழைய பாலத்தில் ரயில் சேவை முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளதா என்பது குறித்து தென்னக ரயில்வே முதன்மை மக்கள் தொடர்பு அலுவலர் குகனேசனிடம் கேட்டோம். அவர் இது குறித்துப் பேசுகையில், பாம்பன் பாலத்தில் கடல் அரிப்பின் காரணமாக பல இடங்களில் அரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் ரயில் பாலத்தின் உறுதித்தன்மை குறைந்துள்ளதால் பாதுகாப்பு கருதி பாம்பன் ரயில் பாலத்தில் ரயில் சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

பாம்பன் பழைய ரயில் பாலம் சுமார் நூற்றாண்டைக் கடந்து உள்ளதால் அடிக்கடி தொழில் நுட்ப கோளாறு ஏற்பட்டு வருகிறது. எனவே பழைய ரயில் பாலம் அருகே புதிய ரயில் பாலம் கட்டும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

ஜூன் மாதத்தில் புதிய ரயில் பால பணி நிறைவடைந்து அதில் விரைவில் ரயில் சேவை தொடங்கப்பட்டு மீண்டும் மண்டபம் ராமேஸ்வரம் இடையே ரயில் சேவை தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாம்பன் ரயில் பாலத்தில் உள்ள தூக்குப்பாலம் அகற்றப்படுவது குறித்து பின்னர் முடிவு செய்யப்படும் என தெரிவித்தார்.



# ஜனநாயக உரிமைகளுக்காகக் குரலெழுப்பும் தார்மீக உரிமையை இழந்துவிட்ட இன்றைய அரசியல் தலைவர்கள்

கந்தையா அருந்தவபாலன்

இலங்கையில் உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரையான காலத்தில் அத்தேர்தல் தொடர்பாக ஜனாதிபதி மீதும் அரசாங்கத்தின் மீதும் பல்வேறுகுற்றச்சாட்டுகள் எதிர்க்கட்சிகளின் தலைவர்களாலும் சில மனித உரிமை அமைப்புகளாலும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாகத் தேர்தலை திட்டமிட்டவாறு உரியகாலத்தில் நடத்துவதைத் தடுக்கும் நோக்கில் ஜனாதிபதி மறைமுகமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார் என்றும் அவை இலங்கையின் அரசியலமைப்பை மீறும் செயல்கள் என்றும் மக்களின் ஜனநாயக உரிமைகளை மறுக்கும் செயல்கள் என்றும் அவர்களால் குற்றஞ் சாட்டப்படுகிறது. அத்துடன் நில்லாது தேர்தல் ஆணைக் குழு மீதும் சில அரச நிறுவனங்களின் தலைவர்கள் மீதும் பல்வேறு குற்றச்சாட்டுகள் அவர்காளால் சுமத்தப்படுகின்றன. குறிப்பாகத் திறைசேரிச் செயலாளர், காவல்துறை மாஅதிபர், அரச அச்சகக்கூட்டுத்தாபனத்தின் தலைவர், போன்றோர் மீது அதிகளவான குற்றச்சாட்டுகளை அவர்கள் முன்வைப்பதுடன் கட்சித் தலைவர்கள் சிலர் குறிப்பிட்ட அரச அதிகாரிகள்மீது அடிப்படை உரிமை மீறல்தொடர்பாக உயர்நீதிமன்றில் வழக்கும் தாக்கல் செய்தும் உள்ளனர். மேலும் இவை தொடர்பாக வெளிநாட்டுத் தூதுவர்களிடமும் முறையிட்டுமுள்ளனர்.

அதேவேளை நாட்டின் இன்றைய நிலைமைக்குக் காரணமானவர்களையும் ஊழல் முறைகேடுகளில் ஈடுபட்டவர்களையும்  ரணில் பாதுகாத்து வருகிறார் என்ற குற்றச்சாட்டையும் தொடர்ந்து முன்வைத்து வருகிறார்கள்.

இவர்களால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளின் சரி பிழை என்பதற்கப்பால் இவ்வாறான குற்றச்சாட்டுகளை மற்றவர்மீது சுமத்துவதற்கான தார்மீக உரிமையை இந்த அரசியல் தலைவர்கள் கொண்டுள்ளார்களா என்பது இன்று மக்கள் மத்தியில் பரவலாக எழுந்திருக்கின்ற ஒரு வினாவாக உள்ளது. அதாவது மக்களின் ஜனநாயக உரிமை தொடர்பாகவோ ஆணைக்குழுக்கள், அரச அதிகாரிகளின் செயற்பாடுகள் தொடர்பாகவோ ஊழல்முறைகேடுகள் தொடர்பாகவோ ஆளுந்தரப்பை நோக்கிக் கைநீட்டும் யோக்கியதை  இத்தலைவர்களிடம் உள்ளதா என்பதாகும். ஏனெனில் ஆளுந்தரப்பில் இருக்கும் போதும் எதிரத்தரப்பில் இருக்கும் போதும் இக்குற்றங்களுக்கு எதிராகக்குரல்கொடுக்கும், அவற்றிற்குத் துணைபோகாத நேர்மையான ஒருவருக்கு மட்டுமே அதற்கான யோக்கியதை காணப்படும்.

இன்றைய ரணில் தலைமையிலான அரசாங்கம் என்பது தனியே ரணிலினுடையதோ அன்றி அவரது ஐக்கிய தேசியக் கட்சியினுடையதோ அல்ல. உண்மையில் ரணில்தலைமையிலான ராஜபக்ஷ சகோதரர்களின் கூட்டு அரசாங்கம். இவ்வரசாங்கத்தை நோக்கி இன்று விரல் நீட்டுபவர்கள் யாரெனப்பார்த்தால் முன்னர் ராஜபக்ஷ அரசாங்கத்தில் முக்கிய பதவி வகித்தவர்கள் அல்லது ரணில் மைத்திரி நல்லாட்சியில் முக்கிய பதவி வகித்தவர்கள். தாம் ஆட்சியிலிருக்கும் போது தெரியாத மனிதஉரிமை மீறல்களும் முறைகேடுகளும் எதிர்த்தரப்புக்கு வருகின்றபோதுதான் இவர்களுக்குத் தெரிகிறது என்பதுதான் இலங்கையின் மிக மோசமான அரசியல் அறம்.



இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் வரலாற்றை நோக்குவோமாயின் மூன்றுதடவைகள் மட்டுமே உரியநேரத்தில் அத்தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. ஏனயவை ஏதோவொரு காரணங்கூறப்பட்டு உரிய நேரத்தில் நடத்தப்படவில்லை. அந்நேரத்தில் மக்களின் ஜனநாயக உரிமை மீறப்பட்டமை தொடர்பாக இவர்களுக்கோ அல்லது இவர்களின் கட்சிகளின் முன்னைய தலைவர்களுக்கோ தெரியவில்லை. இன்று மக்களின் ஜனநாயக உரிமைகள் மீறப்படுகின்றன எனக்குரலெழுப்பும் ஜீ.எல். பீரிஸ்,விமல் வீரவங்ச, உதய கம்பன்பில, சம்பிக்க ரணவக்க போன்றோர் 2005 தொடக்கம் 2015 வரையில் பல்வேறு மனித உரிமை மீறல்கள், ஊழல் முறைகேடுகள் நிறைந்த மகிந்தராஜபக்ஷ ஆட்சியின் முக்கிய பங்காளிகளாக இருந்தவர்களே. அக்காலப்பகுதியில் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள் உரியநேரத்தில் நடத்தப்படாதமை இவர்களுக்கு மனித உரிமை மீறலாகத் தென்பட்டிருக்கவில்லை. ஏன் தற்போதிருக்கும் உள்ளூராட்சி மன்றங்களின் ஆயுள்காலம் கோத்தாபய ஆட்சியின் போது நீடிக்கப்பட்டபோதுகூட மனித உரிமை மீறலாகத் தெரியவில்லை. மறுபுறத்தில் நல்லாட்சி என்று கூறப்பட்ட காலத்தில் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடத்தப்படாது இன்றுவரை இழுபடவிட்டமை மைத்திரி, தயாசிறி போன்ற சிறிலங்காசுதந்திர கட்சித் தலைவர்களுக்கோ அல்லது அவ்வரசாங்கத்தில் பிரதம மந்திரியான ரணிலுக்கு அடுத்த நிலையிலிருந்த இப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித்துக்கோ மனித உரிமை மீறலாகத் தெரியவில்லை. இன்று ஆணைக்குழுக்கள் மீதும் அரச அதிகாரிகள் மீதும் குற்றங்காணும் பலதலைவர்கள்தான் ஆணைக்குழுக்களைப் பலவீனப்படுத்தும் அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தத்துக்கு ஆமாம் போட்ட சாமிகள். அத்துடன் அரச நிர்வாகம், நீதித்துறை என்பன என்றுமில்லாத வகையில் அரசியல் மயப்பட்டதுவும் இவர்கள் காலத்தில்தான் என்பதையும் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

இன்று ஊழலுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கும் இத்தலைவர்களில் எத்தனைபேரின் கைகள் ஊழல்கறை படியாதவை? இலங்கையின் இன்றைய பொருளாதாரத்தின் கையறுநிலைக்கு வித்திட்ட ராஜபக்ஷ சகோதரர்களின் ஊழல் சாம்ராஜ்யத்தில் சிற்றரசர்களாக இருந்தவர்கள் தான் ஜீ.எல்.பீரிஸ், விமல்வீரவங்ச, சம்பிக்க, கம்பன்பில போன்றோர். இன்றும் பீரிஸ் தவிர்ந்த மற்ற மூன்று பேரின் மீதும் வழக்குகள் நிலுவையிலுள்ளன. மறுபுறத்தில் மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் முறைகேட்டில் 11 மில்லியன் அமெரிக்க டொலர் இழப்பை நாட்டுக்கு ஏற்படுத்திய அரசாங்கத்தின் முக்கிய அமைச்சராக இருந்தவர்தான் இப்போது ஊழலுக்கு எதிராகக் குரல் கொடுக்கும் சஜித் பிரேமதாஸ. அரச நிதியைமுறைகேடாகப் பயன்படுத்தியதாக அவர்மீதும் வழக்குண்டு. மகிந்த செய்ததைப்போல இவரும் தனது ஜனாதிபதி தேர்தல் வெற்றிக்காக கடைசி நேரத்தில் தனது அமைச்சின் மூலம் வீடமைப்புக்கென பல கோடி களை அள்ளி இறைத்தவர்.

> **மனித உரிமை மீறல்கள், ஊழல் முறைகேடுகள், அடக்குமுறைகள், நிர்வாகத்தில் அரசியல் தலையீடு தொடர்பாக ரணிலுக்கு எதிராகக் விரல் நீட்டும் அனைவரும் தங்கள் மனசாட்சியைத் தொட்டுத் தாம்அதற்குத் தகுதியானவர்கள்தானா என கேட்டுப் பார்க்க வேண்டும்.**

இவரை நம்பி கடன்பட்டு வீடுகட்டிய பலர்  இன்று நடுத்தெருவில் நின்கிறார்கள்.

ஜே.வி.பியினரைப் பொறுத்த மட்டில் அனுர குமார திசநாயக அமைச்சர் பதவியை வகித்த காலத்தில் ஊழல் எதிலும் ஈடுபட்டமை தொடர்பான குற்றச்சாட்டுகள் இல்லை என்பதுடன் விவசாயத்துறையை மேம்படுத்துவதற்கான பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தார் என்பதை மக்கள் ஏற்றுக் கொண்டாலும் மிகமோசமான மனித உரிமை மீறல்களிலும் ஊழல் முறைகேடுகளிலும் ஈடுபட்டிருந்த மகிந்த அரசாங்கத்தின் பங்காளி என்ற வகையில் அக்கட்சித் தலைவர்களும் மக்கள் பார்வையில் குற்றவாளிகளே. இவர்களைப் போலவே தாம் முற்போக்கான இடது சாரிகள் எனக் கூறித்திரியும் வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண போன்றோரும் களவாணிகளின் கூட்டாளிகளே.

இந்தச் சிங்களத் தலைவர்களுக்கு எது விதத்திலும் சளைத்தவர்களல்ல தமிழ், முஸ்லிம் தலைவர்கள். இன்று தேர்தலுக்குத் தடையேற்படுத்துவது மனித உரிமை மீறல் எனக்கூறும் சுமந்திரன் நல்லாட்சிக் காலத்தில் ரணிலின் கூட்டாளியாகவிருந்து விக்னேஸ்வரன் மக்கள் மத்தியில் செல்வாக்குப்பெற்றிருந்த அன்றைய காலத்தில் வடக்கு மாகாண சபைக்குத் தேர்தல் நடத்தினால் எங்கே தமது கையைவிட்டு அச்சபை நழுவிடும் என்ற பயத்தில் அத்தேர்தலை நடத்தவிடாது தடுத்ததான குற்றச்சாட்டு உண்டு. அதேபோல ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் போன்ற முஸ்லிம் தலைவர்களும் மகிந்த அரசாங்கத்தில் முக்கிய அமைச்சர்களாக இருந்தவர்களே. போலிக் குற்றச்சாட்டுகளின் பேரில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின கீழ் நாற்றுக்கணக்கான இளைஞர்கள் விசாரணைகள் எதுவுமின்றி நீண்ட காலமாகத தடுத்து வைத்திருந்தமை அப்போதைய நீதி அமைச்சரான ரவூப் ஹக்கீமுக்குத் தெரியவில்லை. இன்று சிங்களவர் பயங்கரவாத்த் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும்போது அச்சட்டத்துக்கு எதிராகக் குனரலெழும்பும் அத்தனை சிங்களத் தலைவர்களும் ஆளுங்கட்சி எதிர்க்கட்சி என்ற வேறுபாடில்லாமல் அதற்கு ஆதரவளித்த பெருந்தகைகளே.

ரிஷாத் பதியுதீன் அமைச்சராக இருந்து எவ்வாறு சட்டத்தையும் அரச நிர்வாக ஒழுங்கு முறைகளையும் மீறிச் செயற்பட்டார் என்பதற்கு வில்பத்து காடளிப்பு ஒன்று மட்டும் போதும்.

அன்று தமிழ் மக்கள் தமது மனித உரிமைகள் அரசினால் மிகமோசமாக மீறப்பட்டமை தொடர்பில் சர்வதேசத்துக்கு முறையிட்டபோது அதனை ஏளனஞ் செய்ததுடன் அதற்கெதிராக ஐ.நாவின் கொழும்புப் பணிமனைக்கு முன் ஆர்ப்பாட்டம் நடத்திய விமல் வீரவங்ச இன்று வெளிநாட்டுத் தூதுவர்களிடம் முறைப்பாடு செய்வது வேடிக்கையானது. அன்று வெள்ளைப் புலிகளாகத் தெரிந்தவர்கள் இன்று அவருக்கு நீதியாளர்களாகளாகத் தெரிகிறார்கள்.

மனித உரிமை மீறல்கள், ஊழல் முறைகேடுகள், அடக்குமுறைகள், நிர்வாகத்தில் அரசியல் தலையீடு தொடர்பாக ரணிலுக்கு எதிராகக் விரல் நீட்டும் அனைவரும் தங்கள் மனசாட்சியைத் தொட்டுத் தாம்அதற்குத் தகுதியானவர்கள்தானா  என கேட்டுப் பார்க்க வேண்டும். ‘உன் சுட்டுவிரல் எதிரியைப் பார்த்துக் குற்றஞ்சாட்டும்போது மற்ற விரல்கள் மூன்றும் உன் மார்பைக் காட்டுகிறது” என்ற உண்மையை அவர்கள் மனசாட்சி எடுத்துச் சொல்லும். நடுநலையாகச் சிந்திக்கும் மக்களைப் பொறுத்து இந்த விடயங்களில் எல்லா அரசியல் தலைவர்களும் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகளே. ●

# கல்வி அமைச்சர் சுசில் மீது ஒழுக்காற்று அவசியமானது!

## ரோஹிணி கவிரத்ன எம். பி.

கொழும்பு, பெப். 27

பாராளுமன்ற நடவடிக்கைகளின் போது தன்னை ஆபாசமான வார்த்தைகளில் திட்டியமைக்காக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி கவிரத்ன கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தனவுக்கு எழுதியுள்ள கடித்திலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சபை அமர்வின் போது, தனது கேள்விக்கு பதிலளித்தபோதே குறித்த வார்த்தையை அமைச்சர் பயன்படுத்தினார் என்று ரோஹினி எம். பி. சுட்டிக்காட்டியுள்ளார்.

அமைச்சர் தெரிவித்த கருத்து பல்வேறு தளங்களில் வெளியானதாகவும் தாய் மற்றும் பெண் என்ற தனது பொதுப் பிம்பத்தை பாதித்துள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ள அவர், இவ்வாறான சம்பவங்களால் பாராளுமன்றம் மற்றும் எம். பிக்கள் மீதான மக்களின் அணுகுமுறை எவ்வாறு அமையும் என்றும் கேள்வியெழுப்பியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் குழுவிடம் சமர்ப்பித்து சபாநாயகர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எம். பி கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

# புதிய துறைகளில் இளையோர் நிபுணத்துவம் பெற வேண்டும்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, பெப். 27

கடல்சார் பொருளாதார சட்டம் போன்ற புதிய துறைகளில் நிபுணத்துவம் பெற விரும்பும் இளம் சட்டத்தரணிகளின் முக்கியத்துவத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

துறைமுக நகரத்தை ஒரு நிதி மையமாக மாற்றுவது தொடர் பான சட்டப் பிரிவுகளில் தலை யிட இளம் சட்டத்தரணிகளை ஊக்குவித்த ஜனாதிபதி விக்கிர மசிங்க, பொறுப்பு மற்றும் தலைமைப் பாத்திரங்களை ஏற்றுக்கொள்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

கொழும்பில் இடம்பெற்ற றோயல் கல்லூரி சட்டத்தரணிகள் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

மாநிலத் தலைவர் வழக்கறிஞர்கள் குழுவை உருவாக்க முன்மொழிந்தார், குறிப்பாக கடல்சார் பொருளாதார சட்டத்தில் நிபுணத்துவம் பெற விரும்பும் இளைஞர்கள், புதிய சட்டங்களைக் கற்றுக்கொள்வதற்கும் அதைத் தொடங்குவதற்கும்.

இந்த நிகழ்வின் போது ஜனாதிபதி விக்ரமசிங்க அவர்கள் றோயல் கல்லூரியில் படித்த காலம் மற்றும் அது எவ்வாறு அவரின் குணாதிசயங்கள் மற்றும் பொறுப்புணர்வை வடிவமைக்க உதவியது என்பதை பிரதிபலித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொருளாதாரம் மற்றும் நாட்டின் நலனுக்காக கடுமையான முடிவுகளை எடுப்பதில், அவை செல்வாக்கு இல்லாவிட்டாலும், அரச தலைவர் தனது அர்ப்பணிப்பு குறித்து விவாதித்திருந்தார். (ஐ)

# கட்சியிலிருந்து வெளியேறியோர் தன்னைப் பதவி நீக்க சதியாம்!

## தயாசிறி ஜயசேகர குற்றச்சாட்டு



கொழும்பு, பெப். 27

சுதந்திர கட்சியிலிருந்து விலகியவர்கள் தனக்கு எதிராக சதி செய்து வருகின்றனர் என்று சிறீ லங்கா சுதந்திர கட்சியின் பொதுச் செயலாளரான பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

பொதுச்செயலாளரை பதவியில் இருந்து நீக்கினால் தான் கட்சிக்கு வருவோம் என ஒழுக்காற்று குற்றச்சாட்டின்பேரில் ஏற்கனவே கட்சியிலிருந்து நீக்கப்பட்ட குழுவினர் தெரிவித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான சதிகள் அனைத்தையும் தாம் ஐந்து சதத்துக்கும் கணக்கெடுக்கவில்லை எனவும் தம்மை கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து நீக்குமாறு இவர்கள் கட்சிக்கு முன்மொழிந்துள்ளனர் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர கூறியுள்ளார்.

# மீன்பிடிக்க சென்று மாயமான மீனவரின் சடலம் மீட்கப்பட்டது

மூதூர், பெப். 27

தோணியில் மீன்பிடிக்கச் சென்ற மூதூர் பஹ்ரியா நகரைச் சேர்த்த 3 பிள்ளையின் தந்தை நேற்று ஞாயிற்றுக் கிழமை சடலமாக மீட்கப்பட்டார்.

மூதூர் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பஹ்ரியா நகரைச் சேர்ந்த முஹமது யூசுப் (வயது 35) என்பவர் கடந்த வெள்ளிக் கிழமை காலை தோணியில் தனியாக கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற நிலையில் காணாமல் போயிருந்தார்.

இவரை கிராமத்தவர்கள், பொலிஸார், கடற்படையினர், விமானப் படையினர் பல மணி நேரமாக தேடியும் மீட்கப்படவில்லை.

மூன்று நாட்களாக முன்னெடுக்கப்பட்ட தேடுதல் பணியின்போது நேற்று ஞாயிற்றுக் கிழமை அவரின் சடலம் கண்டெடுக்கப்பட்டது. (ஐ)

## கல்வி tv CHANNEL-1

**27.02.2023**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

## கல்வி tv CHANNEL - 2

**27.02.2023**
**திங்கட்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# மயிலத்தமடுவில் தொடரும் அத்துமீறல் குடிசைகள் அமைக்கும் பணிகள் தீவிரம்!

## தமிழரின் கால்நடை சுட்டுக்கொலை





மட்டக்களப்பு, பெப். 27

**மயிலத்தமடு - மாதவனையில் தமிழருக்கு சொந்தமான கால்நடை ஒன்றை பெரும்பான்மை இனத்தவர் சுட்டுக் கொன்றனர். அத்துடன், அப்பகுதிகளில் குடிசைகளையும் அமைத்து வருகின்றனர். இதையடுத்து அந்தப் பகுதியில் அச்சம் - பதற்ற நிலை உருவாகியுள்ளது.**

நேற்று முன்தினம் காலை வேளை இந்தச் சம்பவம் இடம் பெற்றிருந்தது.

மட்டக்களப்பு மாவட்ட எல்லையான மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரையை தமிழ் மக்கள் நீண்டகாலமாக பயன்படுத்தி வருகின்றனர். இந்த நிலையில், இந்தப் பகுதியை ஆக்கிரமித்து சிங்கள குடியேற்றத்தை உருவாக்க முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில், அங்கு கால் நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள தமிழ் மக்களை தாக்கியதுடன், அவர்களின் கால்நடைகளையும் கொன்று வருகின்றனர். இதனால், அங்கு தமிழ் மக்கள் கால் நடை களை வளர்ப்பதற்கு பெரும் அச்சுறுத்தல்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பில், வழக்கு ஒன்றும் நீதிமன்றில் உள்ளது. ஆனாலும், இந்தப் பகுதியில் பெரும் பான்மை இனத்தவர்க ளின் அத்துமீறிய நடவடிக்கை கள் தொடர்ந்தே வருகின்றன. இந்நிலையில், நேற்று முன்தி னம் அந்தப் பகுதியில் மாடு ஒன்றை அவர்கள் சுட்டுக்கொன் றனர். அத்துடன், அப்பகுதிக ளில் குடிசைகளையும் அமைத்து வருகின்றனர். இதனால், அப்ப குதி மக்களிடையே அச்சம் கலந்த பதற்றநிலை அதிகரித் துள்ளது. (ஐ)

# ஊருக்குள் நுழைய முயன்ற யானைகள் விரட்டப்பட்டன!

சாய்ந்தமருது, பெப். 27

சம்மாந்துறை பிரதேசத்தில், நெல் அறுவடை நடைபெற்று வரும் நிலையில் மூன்று இடங் களில் சுமார் 30இற்கும் மேற் பட்ட யானை கூட்டம் ஊருக் குள் நுழைய முயன்றநிலையில் தடுத்து நிறுத்தப்பட்டது.

சம்மாந்துறை பிரதேசத்தில் விவசாய நடவடிக்கையில் ஈடு பட்டவர்கள் கடந்த வெள்ளிக் கிழமை அதிகாலை யானையின் தாக்குதலில் ஒருவர் உயிரிழந் தார். மூவர் காயமடைந்து மருத்துவமனைகளில் சேர்க்கப் பட்டுள்ளனர்.

இந்த நிலையிலேயே அந்தப் பகுதியின் பிரதேச சபையால் யானைகளை விரட்டுவதற்கு விசேட நடவடிக்கைகள் எடுக் கப்பட்டுள்ளன.

இதேசமயம், அந்தப் பகுதி யில் மக்களுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தும் யானை ஒன்று இனங்காணப்பட்டுள்ளதாகவும் அதனை வனவளத் திணைக்க ளத்தின் உதவியுடன் சரணால யப் பகுதிக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சம்மாந் துறை பிரதேச சபையின் தவிசா ளர் தெரிவித்தார். (ஐ)

# கிழக்கு ஆளுநர் அநுராதா அக்கரைப்பற்று வருகை!



அக்கரைப்பற்று, பெப். 27

அக்கரைப்பற்று பிரதேச மருத்துவமனைக்கு, கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யகம்பத் திடீர் பயணத்தை மேற்கொண்டார்.

இதன்போது, அக்கரைப் பற்று பிரதேச மருத்துவமனை யின் செயல்பாடுகளை கண்காணித்த துடன், குறித்த மருத்துவமனையில் அமையப் பெறவுள்ள புனர்வாழ்வு மையம் தொடர்பிலும் விரிவான கலந் துரையாடலை மேற்கொண் டார்.

இந்தக்த கலந்துரையாடலில் கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் மருத்துவர் ஐ. எல். எம். றிபாஸின் பிரதிநிதி யாக பிரதிப் பணிப்பாளர் மருத் துவர் எம்.பீ.ஏ வாஜித் ஆகி யோரும் பங்கேற்றனர். (ஐ)

# சூட்சுமமாக போதை மருந்து விற்பனை செய்தவர் கைது!

காத்தான்குடி, பெப். 27

பாதணி விற்பனை நிலையம் ஒன்றில் பணியாற்றி தொலைபேசி ஊடாக சூட்சுமமாக போதையூட் டும் மருந்துகளை விற்பனை செய்த நபரை விசேட அதிரடிப் படை கைது செய்துள்ளது.

அவர்களுக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப் படையிலேயே அந்த நபர் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட இந்த சம்பவத்தில் காத்தான்குடியை சேர்ந்த 28 வயதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 100 போதையூட்டும் மருந்துகள் கைப்பற்றப்பட்டன.

கைதான சந்தேக நபர் பாடசாலை, பல்கலைக் கழக மாணவர்கள் உள்ளிட்டவர்களுக்கு நீண்ட காலமாக போதை மருந்துகளை தொலைபேசி ஊடாக தொடர்பு கொண்டு விநியோகித்து வந் துள்ளமை விசாரணையில் இருந்து தெரியவந் துள்ளது.

கைதான சந்தேகநபரை பொலிஸார் ஊடாக நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது. (ஐ)

# ஐஸ் போதையுடன் இளைஞர் கைது!

பெரியநீலாவணை, பெப். 27

ஐஸ் போதைப்பொருளை விற்பனை செய்த சந்தேக நபரை கல்முனை விசேட அதிரடிப் படையினர் கைது செய்துள்ள னர்.

அம்பாறை - பெரியநீலா வணை பொலிஸ் பிரிவிற்குட் பட்ட பாண்டிருப்பு பகுதியில் அமைந்துள்ள வாகன புகை பரிசோதனை நிலையத்துக்கு முன்னால் சந்தேகத்திற்கிடமாக நடமாடிய இளைஞன் குறித்து கல்முனை விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே அவர் கைது செய்யப்பட்டார்.

பெரிய நீலாவணையை சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். அவரிடமி ருந்து ஒரு கிராம் 80 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது. (ஐ)

# 800 கிராம் கஞ்சாவுடன் பெண் ஒருவர் கைது!

மட்டக்களப்பு, பெப். 27

கஞ்சாவை பதுக்கி வைத்து விற்பனை செய்து வந்த பெண் ஒரு வரை பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளி பொலிஸ் பிரிவின் - மண்டூர் - சங்கபுரம் கிராமத்தை சேர்ந்த 40 வயது பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இந்த கைது நடவடிக்கை யில் சந்தேகநபரான பெண்ணிடம் இருந்து 800 கிராம் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மாவட்ட செயலகத்தை மூடி போராட்டம் நடத்துவோம்!

## இப்படி சொல்கிறார் வியாழேந்திரன்

மட்டக்களப்பு, பெப். 27

"பல ஆர்ப்பாட்டங்களை நடத்தியவர்கள் நாம் மட்டக்க ளப்பு காந்தி பூங்காவுக்கு வாய் இருந்தால் சொல்லும் மாதக் கணக்கில் வீதியில் படுத்து கிடந்த நாங்கள் கச்சேரியை இழுத்து மூடி மாதக் கணக்கில் வீதியில் படுப்போம்.", என மட் டக்களப்பு மாவட்ட இராஜாங்க அமைச்சர் ச. வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

மகிழடித்தீவு பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தின் போதே இவ்வாறு தெரிவித்துள் ளார்.

மேலும்,"அண்மையில், எனது பிரத்தியேக செயலாளர் இந்த மாவட்ட மக்களின் ஒரு வாழ்வாதார உதவி திட்டத்தை எனது அமைச்சு ஊடாக செய்வ தற்கான ஓர் அனுமதி கடிதத்தை வாங்க சென்றபோது மாவட்ட அரசாங்க அதிபர் 2015 தொடக் கம் தொடர்ச்சியாக மாவட்டத் தில் ஒரு பாராளுமன்றமாக இருக்கின்ற என்னை எனது செயலாளரிடம் கேட்டுள்ளார் உங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர் என்ன அமைச்சர் என்று.

ஒரு மாவட்ட அரசாங்க அதிபருக்கு இந்த மாவட்டத் தின் பாராளுமன்ற உறுப்பினர் என்ன அமைச்சர் என்று தெரி யாது என்னுடைய செயலாளர் அவருக்கு கூறி இருக்கின்றார் உங்களுக்கு தெரியாவிட்டால் இணையத்தில் போய் தேடிப் பாருங்கள் அவர் என்ன அமைச் சர் என்று உங்களுக்கு புரியும் என்று.

இதுதான் இன்று மாவட்டத் தின் நிலவரம். இன்று எந்த அரச அலுவலகங்களாக இருந்தாலும் எமது மக்கள் நலன் சார்ந்த வேலை திட்டங்கள் நடைபெற வேண்டும். மக்களுக்கான மதிப் பளிக்க வேண்டும். மக்களுக்கா கத்தான் ஜனாதிபதி மக்களுக்கா கத்தான் பிரதமர், அமைச்சர்கள் மக்களுக்காகத்தான் அரசாங்க அதிபர். மக்களுக்காக அரசியல் வாதிகள் மக்களுக்காகத்தான் அரச அதிகாரிகள் அதை யாரும் மறந்து விடக்கூடாது.

பழைய போராட்டங்கள் இந்த மக்களுக்கு சேவை செய்ய முடியாவிட்டால் புண்ணியம் கிடைக்கும் மாவட்டத்தை விட்டு நீங்கள் வெளியேறலாம். எங்களது பழைய போராட்டங் களை நீங்கள் பார்க்கவில்லை. தெரியாவிட்டால் ஊடக வாயி லாக தேடிப் பாருங்கள். பல ஆர்ப்பாட்டங்களை நடத்திய வர்கள் நாம் மட்டக்களப்பு காந்தி பூங்காவுக்கு வாய் இருந் தால் சொல்லும் மாதக் கணக் கில் வீதியில் படுத்து கிடந்த நாங்கள் கச்சேரியை இழுத்து மூடி மாதக் கணக்கில் வீதியில் படுப்போம்.

மாவட்ட செயலகமும் பிர தேச செயலகமும் மக்களுக்கு சேவை செய்வதாக இருக்க வேண்டும். மக்களுக்கு சேவை செய்யாவிட்டால் நீங்களாக இந்த மாவட்டத்தை விட்டு வெளியேற வேண்டும். இல்லா விட்டால் நாங்கள் வெளியேற் றுவோம்." என அவர் தெரிவித் துள்ளார்.

# கியூபாவில் அடங்காமல் பரவுகின்றது காட்டுத் தீ!

## 2,100 ஏக்கர் காடுகள் அழிவு



ஹவானா, பெப். 27

கியூபாவில் ஒரு வார காலமாக கட்டுக்கடங்காமல் பற்றி எரிந்து வரும் காட்டுத் தீயை அணைக்க முடியாமல் தீயணைப்பு வீரர்கள் திணறி வருகின்றனர்.

ஹோல்குயின் மாகாணத்திலுள்ள வனப்பகுதியில் கடந்த சனிக்கிழமை பரவிய காட்டுத் தீ சுமார் 2 ஆயிரத்து 200 ஏக்கர் பரப்பளவில், பற்றி எரிந்து வருகிறது.

கியூபா பாதுகாப்புப் படையின் தீயணைப்பு வீரர்கள் விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் மூலம் தீயைக் கட்டுப்படுத்த போராடி வருகின்றனர். காட்டுத் தீயால் அப்பகுதி முழுவதும் புகைமூட்டமாகவும், வானம் செந்நிறமாகவும் காட்சியளித்தது.

வனத் தோட்டங்கள் மற்றும் கோப்பி பயிர்களுக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளதோடு, வனவிலங்குகள் மற்றும் தாவரங்களுக்கும் பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது என கியூபாவின் அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் நிபுணர் ரெய்னியர் ராமிரெஸ் தெரிவித்துள்ளார்.

கியூபாவில் ஏற்கனவே ஜனவரி மாதத்தில் 80 காட்டுத் தீ ஏற்பட்டுள்ளதாக உள்ளூர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேற்கு மண்டலத்தில் உள்ள பினார் டெல் ரியோ மற்றும் ஆர்டெமிசா மற்றும் நாட்டின் மத்திய கிழக்கு பகுதியில் உள்ள காமகுய் மற்றும் ஹோல்குயின் ஆகியவை காட்டு தீயால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளாகும்.

(ஐ)

# ஐ.எஸ்ஸினரின் தாக்குதலில் 70 படையினர் உயிரிழப்பு!



வாகடுகு, பெப். 27

மேற்கு ஆபிரிக்க நாடான பர்கினோ பசோவில் ஐ. எஸ். பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 70 இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் உயிரிழந்தனர்.

நாட்டின் வடக்கு பகுதியில் உள்ள டியோ என்னுமிடத்தில் இராணுவ வாகன அணிவகுப்பின் மீது பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் 70இற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் உயிரிழந்தனர். ஏராளமானவர்கள் காயமடைந்தனர். 15 பேர் பணயக் கைதிகளாக பிடிக்கப்பட்டனர்.

கடந்த வாரம் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலுக்கு ஐ. எஸ். அமைப்பு பொறுப்பேற்றுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு வெளியிட்டுள்ள படங்களில், இராணுவ சீருடையுடன் 54 படையினர் இறந்து கிடக்கும் காட்சி இடம் பெற்றுள்ளது. அத்துடன், இராணுவத்தினரிடமிருந்து பறிக்கப்பட்ட 50இற்கும் மேற்பட்ட இயந்திர துப்பாக்கிகள், பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்ட இராணுவத்தினரின் படங்களையும் பயங்கரவாதிகள் வெளியிட்டனர்.

(ஐ)

# சீனாவின் சமாதான திட்டத்தை நிராகரித்தது உக்ரைன் அரசு!



கீவ், பெப். 27

**ரஷ்யாவுடனான போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக சீனா முன்வைத்துள்ள சமாதான திட்டத்தை உக்ரைன் நிராகரித்துள்ளது.**

இது குறித்து அந்த நாட்டின் ஜனாதிபதி வொலாடிமிர் ஸெலன்ஸ்கியின் ஆலோசகர் மிகயீலோ பொடோலியக் வெளியிட்டுள்ள ருவிற்றர் பதிவில், “சீனா தன்னை உலகளவில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நாடாகக் கருதினால் நிதர்சனத்துக்கு துளியும் பொருந்தாத திட்டங்களை முன்வைக்கக் கூடாது. சர்வதேச சட்டங்களை மதிக்காத, இந்தப் போரில் படுதோல்வியடைவிருக்கும் ஒரு நாட்டுக்காக (ரஷ்யா) பரிந்து பேசக் கூடாது.

சீனாவின் சமாதான திட்டத்தில் தொலைநோக்குப் பார்வை இல்லை. போருக்காக பல ஆண்டுகள் திட்டமிட்டவர் யாரும் 3 நாள் ஆட்டத்தை ஆட மாட்டார்கள். சமாதானத்துக்கான வாய்ப்பு கால வரையறையற்றது என்று சீனா கருதக் கூடாது’ என்று குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்து ஓராண்டு நிறைவடைவதை ஒட்டி அந்தப் போர் குறித்த தனது நிலைப்பாடு குறித்த அறிக்கையை சீனா வெள்ளிக்கிழமை வெளியிட்டது.

அதில், போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான திட்டங்களை சீனா குறிப்பிட்டிருந்தது.

எனினும், அந்த அறிக்கையில் உக்ரைன் மீது படையெடுத்த ரஷ்யாவுக்கு கண்டனம் தெரிவிக்கப்படவில்லை. அதற்கு பதிலாக ரஷ்யா மீது மேற்கத்திய நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளதை சீனா விமர்சித்திருந்தது.

இந்த விவகாரத்தில் அனைத்து தரப்பினரும் பொறுமை காக்க வேண்டும். எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்க்கும் செயலில் ஈடுபடக்கூடாது. நிலைமை மேலும் மோசமாகி, கட்டுப்பாடுத்த முடியாத அளவுக்குச் செல்லும் அளவுக்கு விட்டு விடக் கூடாது என்று அந்த அறிக்கையில் சீனா வலியுறுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# 3,000 வருடங்களுக்கு முன்பே மூளையில் சத்திர சிகிச்சை!



ஜெருசலேம், பெப். 27

3 ஆயிரம் வருடங்களுக்கு முன்னரே இறந்தவர்களில் ஒருவருக்கு அவர் இறப்பதற்கு சற்று முன்பு மூளையில் சத்திர சிகிச்சை செய்யப்பட்டதை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இஸ்ரேலில் கி. மு. 15ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து, இறந்த இரண்டு சகோதரர்களின் கல்லறையை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு செய்த போதே இந்த ஆச்சரிய விடயம் தெரிய வந்தது.

இம்மாதிரியான அறுவை சிகிச்சைகள் மண்டை ஓட்டு சத்திர சிகிச்சைகள் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இவை கிழக்கு பகுதிகளில் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கூறும் போது, “பண்டைய நகரமான டெல் மெகிடோவில் உள்ள ஒரு கல்லறையின் அகழ்வாராய்ச்சியின் போது கி. மு. 1550 முதல் கி. மு. 1450 வரையிலான வெண்கல காலத்தில் வாழ்ந்த சகோதரர்களின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இதில் மூத்த சகோதரர் (இவருடைய வயது 20 தொடக்கம் 40 வயதுக்குள் இருக்கலாம்.) மண்டை ஓட்டில் சத்திர சிகிச்சை செய்ததற்கான தடயங்கள் இருந்தன. மண்டை ஓட்டில் 1.2 இன்ச் அளவில் ஓட்டை இருந்தது. இது தொடர்பாக நாங்கள் நடத்திய ஆராய்ச்சியில் மூளை தொடர்பான அறுவை சிகிச்சைகள் 3000 ஆண்டுகளுக்கு முன்னரே உலகளவில் பரவலாக செய்யப்பட்டிருப்பது கண்டறியப்பட்டது. இந்த தடயங்கள் மூலம் இப்பகுதியின் மருத்துவம் மற்றும் கலாசாரம் குறித்து நாம் புரிந்து கொள்ள முடிகிறது.

டெல் மெகிடோ நகரம் வெண்கல காலத்தில் வணிக ரீதியாக செல்வாக்கு மிக்க பகுதியாக இருந்தது. நாங்கள் கண்டெடுத்த எலும்பு கூடுகளின் சொந்தக்காரர்களும் நல்ல வளமையான குடும்பத்தை சேர்ந்தவர்களாக இருக்கக் கூடும். மரபணு சோதனை மூலம் அவர்கள் சகோதரர்கள் என்பதை நாங்கள் கண்டறிந்தோம். மூத்த சகோதரருக்கு ஏன் மூளை அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என உறுதியாக கூறமுடியவில்லை. எனினும் அவர் கால்-கை வலிப்பு, தலையில் அழுத்தம் போன்ற நோயாலும் மரபணு நோயாலும் பாதிக்கப்பட்டிருக்கலாம்” என்று கூறினர். (ஐ)

# உலக வங்கி தலைவராக இந்தியரான அஜய் பங்கா!



வாஷிங்டன், பெப். 27

உலக வங்கியின் புதிய தலைவராக இந்தியரான அஜய் பங்கா நியமிக்கப்படுவார் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

உலக வங்கியின் தலைவராக உள்ள டேவிட் மால்பஸ் பதவிக் காலம் 2024 ஏப்ரல் வரை உள்ளது. இந்நிலையில், வரும் ஜூன் மாதம் பதவி விலகப் போகிறார் என்று அவர் அறிவித்துள்ளார். இதையடுத்து வரும் மே மாதம் புதிய தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார் என தகவல் வெளியானது.

இந்நிலையிலேயே, இந்தியர் ஒருவர் உலக வங்கியின் தலைவராக நியமிக்கப்படுவார் என்று ஜோ பைடன் அறிவித்துள்ளார். இவரின் நியமனத்துக்கு உலக வங்கியின் இயக்குநர் சபை ஒப்புதல் அளித்துவிட்டால், உலக வங்கியின் தலைவராக பொறுப்பேற்கும் முதல் இந்தியர் என்ற பெருமை அஜய் பங்காவுக்கு கிடைக்கும். பஞ்சாப் மாநிலம் ஜலந்தர் நகரைச் சேர்ந்தவர் அஜய் பங்கா. காலநிலை மாற்றம் உள்ளிட்ட பிரச்னைகளில் அஜய் நிபுணத்துவம் வாய்ந்தவர் என்றும் உலக வங்கியை திறமையாக நிர்வகிப்பார் என்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பாராட்டியுள்ளார்.

உலகில் மிகவும் திறமை வாய்ந்த நபர்களில் இவரும் ஒருவராவார். (ஐ)

# நியூசிலாந்துடனான டெஸ்ட் இலங்கை அணி அறிவிப்பு!




கொழும்பு, பெப். 27

நியூசிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுலா மேற்கொள்ளவுள்ள இலங்கை அணி, 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கும் 17 வீரர்கள் அடங்கிய இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

திமுத் கருணாரட்ண தலைமையிலான இலங்கை அணியில் அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால், ஓஷத பெர்னாண்டோவும் அணிக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான நிஷான் மதுஷ்க, வேகப்பந்துவீச்சாளரான மிலான் ரத்நாயக்க இரு புதிய வீரர்களின் பெயர்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

வரும் மார்ச் 9ஆம் திகதி நியூசிலாந்துக்கு எதிராக இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. நியூலாந்து ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு சாதகத்தன்மைமிக்கது என்றபடியால், வேகப்பந்துவீச்சாளர்கள் 7 பேர் அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

அணி விவரம் - திமுத் கருணாரட்ண (அணித்தலைவர்), தனஞ்சய டீ சில்வா, அஞ்சலோ மத்தியூஸ், தினேஷ் சந்திமால், குசல் மெண்டிஸ், ஓஷத பெர்னாண்டோ, நிரோஷன் திக்வெல்ல, கமிந்து மெண்டிஸ், ரமேஷ் மெண்டிஸ், நிஷான் மதுஷ்க, பிரபாத் ஜயசூரிய, சாமிக்க கருணாரட்ண, கசுன் ரஜித்த, லஹிரு பெர்னாண்டோ, விஷ்வ பெர்னாண்டோ, அசித்த பெர்னாண்டோ, மிலான் ரத்நாயக்க.

மகளிர் உலகக் கிண்ணம்:

# இங்கிலாந்து அணியை வீழ்த்தி இறுதியில் தென்னாபிரிக்கா!



கேப்டவுன், பெப். 27

மகளிர் இருபது - 20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் 2ஆவது அரையிறுதி ஆட்டத்தில் தென்னாபிரிக்கா 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்தை வீழ்த்தி 2ஆவது அணியாக இறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெற்றது.

இருபது - 20 உலகக் கிண்ண இறுதி ஆட்டத்துக்கு முதன்முறையாக தகுதி பெற்றது.

இந்த அரையிறுதியில் முதலில் தென்னாபிரிக்கா 20 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 164 ஓட்டங்கள் சேர்த்தது. அடுத்து ஆடிய இங்கிலாந்து 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 158 ஓட்டங்களே எடுத்தது.

55 பந்துகளில் 68 ஓட்டங்கள் விளாசி, அட்டகாசமாக 4 பிடியெடுப்புகளையும் செய்த தென்னாபிரிக்காவின் தஸ்மின் பிரிட்ஸ் 'ஆட்டநாயகி' ஆனார்.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்காவில் லௌரா வோல்வார்டட் 5 பௌண்ட்ரிகள், 1 சிக்ஸர் உள்பட 53, தஸ்மின் பிரிட்ஸ் 6 பௌண்ட்ரிகள், 2 சிக்ஸர் உள்பட 68 ஓட்டங்கள் விளாசினர்.

கிளோ டிரையான் 3, நாடின் டி கிளெர்க் 0 ஓட்டங்களுக்கு வெளியேற, ஓவர்கள் முடிவில் மாரிஸேன் காப் 27, அணித்தலைவி சுனே லஸ் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இங்கிலாந்து பந்துவீச்சில் சோபி எக்லஸ்டன் 3, லௌரென் பெல் 1 விக்கெட் கைப்பற்றினர்.

பின்னர் இங்கிலாந்து இன்னிங்ஸில் அதிகபட்சமாக நேட் ஸ்கீவர் 5 பௌண்ட்ரிகளுடன் 40 ஓட்டங்கள் விளாச, டேனி வியாட் 34, சோபியா டங்க்ளி 28, அலிஸ் கேப்சி 0, ஹீதர் நைட் 31, எமி ஜோன்ஸ் 2, சோபி எக்லஸ்டன் 1, கேத்தரின் ஸ்கீவர் 0 ஓட்டங்களுக்கு விக்கெட்டை இழந்தனர்.

ஓவர்கள் முடிவில் சாரா கிளென் 8, சார்லி டீன் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

தென்னாபிரிக்க தரப்பில் அயபோங்கா ககா 4, ஷப்னிம் இஸ்மாயில் 3, நாடின் டி கிளெர்க் 1 விக்கெட் சாய்த்தனர்.

# இந்தியாவுடனான டெஸ்ட் ஆஸிக்கு ஸ்மித் தலைவர்!



சகலதுறை வீரர் கமரூன் கிறீன் 3-ஆவது டெஸ்டில் விளையாடவுள்ளார்.

சிட்னி, பெப். 27

அவுஸ்திரேலிய அணியின் தலைவர் அவசரமாக நாடு திரும்பியிருந்தார். மார்ச் 1ஆம் திகதி தொடங்கும் இந்தியாவுக்கு எதிரான 3ஆவது டெஸ்டிலிருந்து விலகியிருக்கிறார்.

முன்னதாக அந்த டெஸ்டில் பங்கேற்க அவர் இந்தியா வருவார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தற்போது அவரது விடுப்பு காலம் நீட்டிக்கப்பட்டுள்ளது. கம்மின்ஸின் தாயார் உடல்நல குறைவுடன் இருப்பதாக அவுஸ்திரேலிய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே, பட் கம்மின்ஸ், 4ஆவது டெஸ்டில்கூட பங்கேற்பது உறுதியாகத் தெரியாத நிலையில் இந்தூரில் புதன்கிழமை ஆரம்பமாகவுள்ள அவுஸ்திரேலிய அணிக்கு ஸ்டீவ் ஸ்மித் தலைமை தாங்குகிறார்.

இதனிடையே, அவுஸ்திரேலிய

(ஐ)



# இங்கிலாந்துடனான டெஸ்ட் நியூசிலாந்து அபார ஆட்டம்!

வெலிங்டன், பெப். 27

இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி வெலிங்டனில் நடைபெற்று வருகிறது.

முதலில் ஆடிய இங்கிலாந்து அணி 8 விக்கெட்கள் இழப்புக்கு 435 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. இதையடுத்து முதல் இன்னிங்ஸை ஆடிய நியூசிலாந்து அணி சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்து தடுமாறியது.

நியூசிலாந்து அணி 42 ஓவர் முடிவில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 138 ஓட்டங்கள் எடுத்திருந்த போது மழை குறுக்கிட்டதால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. தொடர்ந்து மழை பெய்ததால் 2ஆம் நாள் ஆட்டம் அத்துடன் முடிக்கப்பட்டது.

இந்நிலையில், மூன்றாம் நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது. தொடர்ந்து ஆடிய நியூசிலாந்து அணி 209 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

இங்கிலாந்து சார்பில், ஸ்டுவர்ட் பிரோட் 4 விக்கெட்டும், ஜேம்ஸ் அண்டர்சன், ஜேக் லீச் தலா 3 விக்கெட்டும் வீழ்த்தினர்.


இதையடுத்து, பின்தொடரும் வாய்ப்பை பெற்ற நியூசிலாந்து அணி 2ஆவது இன்னிங்ஸை தொடர்ந்தது. சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய தொடக்க வீரர்கள் டெவன் கொன்வே 61 ஓட்டங்களும், ரொம் லதாம் 83 ஓட்டங்களும் குவித்து நம்பிக்கை அளித்தனர். வில் யங் 8 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். கேன் வில்லியம்சன் 25 ஓட்டங்களும், ஹென்றி நிகோல்ஸ் 18 ஓட்டங்களும் எடுத்திருந்த நிலையில், நேற்றைய ஆட்டம் நிறைவு பெற்றது.

அப்போது நியூசிலாந்து அணி 3 விக்கெட் இழப்புக்கு 202 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இங்கிலாந்தின் முதல் இன்னிங்ஸ் ஓட்டத்தை விட 24 ஓட்டங்கள் பின் தங்கியுள்ளது.

(ஐ)

டுபாய் ஓப்பன் ரென்னிஸ்

# ஸ்வியாரெக்கை வீழ்த்தி கிரெஜ்சிகோவா சம்பியன்



டுபாய், பெப். 27

முதல்நிலை வீராங்கனையான ஸ்வியாரெக்கை வீழ்த்தி கிரெஜ்சிகோவா டுபாய் ஓப்பன் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

டுபாய் ஓப்பன் சர்வதேச ரென்னிஸ் போட்டி ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடந்தது.

இதில் நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் இறுதிப்போட்டியில் முதல்நிலை வீராங்கனையும், 3 கிராண்ட்ஸ்லம் பட்டம் வென்றவருமான இகா ஸ்வியாரெக் (போலந்து), தரவரிசையில் 30ஆவது இடத்தில் உள்ள செக் குடியரசின் பார்போரா கிரெஜ்சிகோவாவுடன் மோதினார்.

ஒரு மணி 31 நிமிடங்கள் நடந்த இந்தப் போட்டியில் கிரெஜ்சிகோவா 6-4, 6-2 என்ற நேர்செற்றில் ஸ்வியாரெக் அதிர்ச்சி அளித்து சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். மகுடம் சூடிய கிரெஜ்சிகோவா 900 தரவரிசை புள்ளிகளுடன் சுமார் 17 கோடி ரூபாய் (இலங்கை மதிப்பில்) பரிசாக தட்டிச் சென்றார். 2ஆவது இடம் பெற்ற இகா ஸ்வியாரெக் 10.5 கோடி ரூபாயை பரிசாக பெற்றார்.

# மக்களுக்கு உதவியளிப்பதற்கு 45 இலட்சம் டொலர் அவசியம்!

## உலக உணவுத் திட்டம்

**உலக உணவுத்திட்டம் கடந்த ஜனவரியில் மாத்திரம் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட 6 இலட்சத்து 36 ஆயிரத்து 125 பேருக்கு அவசியமான உதவிகளை வழங்கியுள்ளது. எதிர்வரும் ஜூன் வரையான 6 மாத காலத்துக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு 45 இலட்சம் டொலர் நிதி அவசியமென மதிப்பிட்டுள்ளது.**

தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டின் பொருளாதாரம் இன்னமும் மீட்சியடையாத நிலையில், அதன்விளைவாக உணவுப் பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மக்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்துவருகின்றது. அதேவேளை நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் மக்களுக்கு ஐக்கிய நாடுகள் சபையின் கிளை அமைப்புக்களான உலக உணவுத்திட்டம், உணவு மற்றும் விவசாய அமைப்பு, யுனிசெப் அமைப்பு என்பன உள்ளடங்கலாகப் பல்வேறு சர்வதேசப் பொதுக்கட்டமைப்புக்கள் அத்தியாவசிய உதவிகளை வழங்கிவருகின்றன.

அந்த வகையில் இலங்கையில் பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டிருப்போருக்குக் கடந்த ஜனவரி வரையான காலப்பகுதியில் வழங்கப்பட்டுள்ள உதவிகள் மற்றும் தேவையான நிதியுதவி என்பன குறித்து உலக உணவுத் திட்டத்தால் வெளியிடப்பட்டுள்ள மாதாந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள தரவுகளின் பிரகாரம் இதுவரையான காலப்பகுதியில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு மொத்தமாக70 இலட்சம் டொலர் பெறுமதியான நிதியுதவி வழங்கப்பட்டிருப்பதுடன் 10 இலட்சத்து 69 ஆயிரத்து 557 மெற்றிக் தொன் உணவுப்பொருட்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. அதேவேளை கடந்த ஜனவரி மாதத்தில் மாத்திரம் 6 இலட்சத்து 36 ஆயிரத்து 125 பேருக்கு அவசியமான அத்தியாவசிய உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இதேபோன்று கடந்த ஆண்டு ஜூனில் உலக உணவுத் திட்டத்தின் அவசர உதவி வழங்கல் செயல்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து தற்போதுவதை 4 இலட்சத்து 89 ஆயிரத்து 40 பேருக்கு நிதியுதவியும் 3 இலட்சத்து 62 ஆயிரத்து 100 குடும்பங்களுக்கு உணவுப்பொருட்கள்சார் உதவியும் வழங்கப்பட்டுள்ளன. இந்த உதவிகள் மொத்தமாக 14 இலட்சம் மக்களைச் சென்றடையவேண்டும் என்பதே உலக உணவுத்திட்டத்தின் இலக்காகும்.

நாட்டின் 25 மாவட்டங்களிலுள்ள 15 ஆயிரம் குடும்பங்களை இலக்குவைத்து உணவு மற்றும் விவசாய அமைப்பும் உலக உணவுத்திட்டமும் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து உணவுப்பாதுகாப்பு தொடர்பான கூட்டு மதிப்பீடொன்றை முன்னெடுக்கவுள்ளன. அதுமாத்திரமன்றி இவ்வருடம் ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையான 6 மாதகாலப்பகுதியில் பாதிக்கப்பட்ட தரப்பினருக்குரிய உதவிகளை வழங்குவதற்கு 45 இலட்சம் டொலர்கள் அவசியமென மதிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்படுத்தும் தேவையில்லை

## கூறுகிறது பொதுஜன பெரமுன

கொழும்பு, பெப். 26

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிப்பதற்கு சுயாதீன தரப்பினரின் ஒத்துழைப்பு அவசியமற்றது. பிரதமர் பதவியில் மாற்றம் ஏற்படுத்த வேண்டிய தேவை ஏதும் கிடையாது. ஆகவே, பிரதமர் பதவி தொடர்பில் சன்ன ஜயசுமண குறிப்பிட்டுள்ள விடயம் அடிப்படையற்றது என பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பிரதமர் பதவி தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமண குறிப்பிட்டுள்ள விடயம் தொடர்பில் வினவியபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை பலவீனப்படுத்தி, அரசாங்கத்தில் இருந்து வெளியேறி தற்போது சுயாதீனமாக செயல்படும் ஜீ.எல். பீரிஸ், டலஸ் மற்றும் விமல் வீரவன்ஸ அணியினருக்கு எதிராக கட்சி மட்டத்தில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வெகுவிரைவில் இவர்களின் பாராளுமன்ற உறுப்புரிமையை சவாலுக்கு உட்படுத்துவோம்.

பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை பதவி நீக்கி, பொதுஜன பெரமுனவின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவை மீண்டும் பிரதமராக்க சுயாதீன உறுப்பினர்களின் ஒத்துழைப்பை கோரியதாக பாராளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமண குறிப்பிட்டுள்ள விடயம் அடிப்படையற்றது.

பிரதமர் தினேஷ் குணவர்த்தன பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் ஆகவே, அவரை பதவி நீக்க வேண்டிய தேவை ஏதும் கிடையாது. அத்துடன், மகிந்த ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்க சுயாதீன உறுப்பினர்களின் ஒத்துழைப்பை பெறவேண்டிய தேவையும் கிடையாது. ஏனெனில், பொதுஜன பெரமுனவுக்கே பாராளுமன்றத்தில் இன்றும் பெரும்பான்மை பலம் உள்ளது - என்றார். (அ)

# உயர்கல்வி அமைச்சின் பத்திரங்களை திருப்பி அனுப்பிய ஜனாதிபதி ரணில்



கொழும்பு, பெப். 26

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வார அமைச்சரவைக் கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த உயர்கல்வி அமைச்சின் அமைச்சரவைப் பத்திரங்களை திருப்பி அனுப்பியுள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் உயர் கல்விக்காக வெளிநாடு செல்லும்போது அவர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கும் விமான ரிக்கெற் அரசாங்க செலவில் வழங்கப்படவேண்டும் என்று கடந்த வாரம் அமைச்சரவைப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அதனை அமைச்சரவை செயலாளருக்கு திருப்பி அனுப்பியுள்ள ஜனாதிபதி ரணில், தற்போதைக்கு அதனை அமைச்சரவை அனுமதிக்காக சமர்ப்பிக்கவேண்டாம் என்று உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் பல்கலைக்கழக உபவேந்தர்களை நியமிக்கும்போது நேர்முகத் தெரிவு முறையை பின்பற்ற வேண்டாம் என்று பல்கலைக்கழக பேராசிரியர்கள் விடுத்த கோரிக்கையையும் ஜனாதிபதி நிராகரித்துள்ளார்.

பல்கலைக்கழகங்களின் ஆளுநர் சபை மூலம் பொருத்தமான நபர்கள் மூவரின் பெயர்களை தனக்கு சிபாரிசு செய்யும் பட்சத்தில் அவர்களில் இருந்து பொருத்தமான ஒருவரை தான் தேர்ந்தெடுத்து நியமனம் செய்யத் தயார் என்றும் ஜனாதிபதி அறிவித்துள்ளார். (அ)

# இறக்குமதியாகும் முட்டைகள் ரூ. 30இற்கு விநியோகிக்கப்படும்!

## நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, பெப். 27

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை 30 ரூபாய் விலையில் உணவு உற்பத்தியாளர்களுக்கு வழங்க முடியும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

முட்டையின் விலையை கட்டுப்படுத்தும் நோக்கில் முட்டைகளை இறக்குமதி செய்ய அமைச்சரவை அண்மையில் தீர்மானித்துள்ளது. இதன் பிரகாரம், 20 இலட்சம் முட்டைகளை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்படும் முட்டைகள் சந்தைக்கு விநியோகிக்கப்படமாட்டாது என இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# கேக் விலை குறைக்கப்படும் மற்றவை விலை குறையாது

## வெதுப்பக உரிமையாளர் சங்கம்

கொழும்பு, பெப். 27

வெதுப்பக தொழில் துறையினருக்கு இறக்குமதி செய்யப்படும் முட்டை ஒன்று 30 ரூபாய்க்கு வழங்கப்படுமாயின் கேக்கின் விலையை குறைப்பது தொடர்பில் அவதானம் செலுத்த முடியும் எனினும் பாண் உள்ளிட்ட ஏனைய வெதுப்பக உற்பத்திகளின் விலையை குறைக்க முடியாது எனவும் அகில இலங்கை வெதுப்பக உரிமை யாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது சந்தையில் ஒரு கிலோ கேக் ஆயிரத்து 200 ரூபாய் முதல் 1,500 ரூபாய் வரை விற்பனைகின்றது. இறக்குமதி செய்யப்படும் முட்டை ஒன்றை 30 ரூபாய்க்கு தொழில் துறையினருக்கு வழங்க முடியும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்திருந்தார். இந்நிலையிலேயே வெதுப்பக உரிமையாளர் சங்கம் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. (ஐ)

# அரச நிறுவன அதிகாரியின் மாதாந்த சம்பளம் 40 இலட்சம்!

கொழும்பு, பெப்.26

பெரும் நட்டத்தை சந்தித்து வரும் அரச நிறுவனமொன்றின் பிரதம அதிகாரி ஒருவரின் மாதாந்த சம்பளம் மற்றும் கொடுப்பனவு 40 இலட்சம் ரூபாய் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

2009 தொடக்கம் இந்த நிறுவனத்தின் இழப்பு 90,000 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது தவிர, அரசு நிறுவனங்களுக்கு 18, 900 கோடி கடனும் உள்ளது.

இந்த அதிகாரி பண வரம்பு இல்லாத கடன் அட்டையை பயன்படுத்தி வருவதும், கடன் தொகையும் அந்த நிறுவனத்தால் செலுத்தப்படுவதும் தெரியவந்துள்ளது. அரச நிறுவனங்களின் செலவீனங்களை மட்டுப்படுத்துவதற்கு நிதி அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களை புறக்கணிக்கப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது . (அ)

# இரும்பு பரலில் குளித்தவர் மின்னல் தாக்கி உயிரிழப்பு

கொழும்பு, பெப். 27

இரும்பு பரலுக்குள் குளித்தவர் மின்னல் தாக்கி உயிரிழந்தார். அவரின் மனைவி காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரி - கலவானை - பபோடுவ பிரதேசத்தை சேர்ந்த 42 வயது நபரே இவ்வாறு உயிரிழந்தார்.

இடி மின்னலுடன் மழை பெய்து கொண்டிருந்த வேளையில் இரும்பு பரலுக்குள் குளித்தபோதே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது. மின்னல் தாக்கத்துக்கு உள்ளான இந்நபர் கலவானை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

இந்த சம்பவத்தில் அவரின் மனைவியும் காயமடைந்து இரத்தினபுரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

# கைதி தப்பிக்க விட்ட 4 பொலிஸார் கைது!

கொழும்பு, பெப். 27

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் தப்பிச் சென்ற சம்பவம் தொடர்பில் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விமான நிலைய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, சார்ஜண்ட் மற்றும் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர் போலியான பெயரில் துபாய் செல்வதற்காக விமான நிலையத்துக்குச் சென்றிருந்தபோது கைதுசெய்யப்பட்ட நிலையில் பொலிஸ் அதிகாரிகளிடமிருந்து அவர் தப்பிச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஜே.வி.பியின்...

அனுமதிக்குமாறு கோரினர். பொலிஸார் மறுத்த நிலையில் இரு பகுதியினருக் கும் இடையே சுமார் அரை மணிநேரம் வாக்குவாதம் தொடர்ந்தது. இதன் போது ஜே. வி. பி. தலைவர்கள் உரை களை தொடங்கினர்.

இந்த சமயத்தில் பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசித் தாக்கினர். அத்துடன், தண்ணீர் தாரை பிரயோகத்தையும் செய்தனர். இதைத் தொடர்ந்து அப்பகுதியில் பதற்ற நிலை உருவானது. இதில் 28 பேர் காயங்கள் மற்றும் பாதிப்புகளுக்கு உள்ளாகினர்.

முன்னதாக ஜே. வி. பி. தலைவர் அநுரகுமார உட்பட 26 பேர் ஆர்ப்பாட்டங்களை நடத்தக்கூடாது என்று கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

அரசாங்கம் தாமதப்படுத்தாமல் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உடன் நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி இந்தப் பேரணியை ஜே. வி. பி. நடத்தியிருந்தது. (ஐ)

## சகல...

நாட்டின் 341 உள்ளூராட்சி சபைகளுக்கு கடந்த 2018ஆம் ஆண்டு பெப்ரவரி 10ஆம் திகதி தேர்தல் நடை பெற்றது. 2018 மார்ச் 20ஆம் திகதி உள்ளூராட்சி சபைகளின் ஆட்சி பொறுப்பேற்கப்பட்டது. இவற்றின் ஆயுட்காலம் கடந்த 2022 மார்ச் 20ஆம் திகதியுடன் நிறைவுக்கு வந்தது. இந்த நிலையில், கொரோனா பெருந்தொற் றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியாலும் தேர்தலை நடத்த முடியாது போனது.

இதனால், உள்ளூராட்சி அமைச்சருக்கு உரிய அதிகாரங்களின் அடிப்படையில் உள்ளூராட்சி சபைகளின் ஆயுட்காலம் ஒரு வருடத்தால் அதிகரிக்கப்பட்டது. உள்ளூராட்சி சட்டவிதிகளின்படி அமைச்சரால் ஒரு வருடத்துக்கு மட்டுமே சபைகளின் ஆயுட்காலத்தை நீடிக்க முடியும். இதன் பிரகாரம் ஏற்கனவே 2023 மார்ச் 20ஆம் திகதி வரை உள்ளூராட்சி சபைகளின் ஆயுள்காலம் நீடிக்கப்பட்டது. இதனால், அதற்கு முன்னராகவே தேர்தலை நடத்துவதற்கு ஆயத்த நடவடிக்கைகள் இடம்பெற்றன.

தேர்தல் ஆணைக்குழு மார்ச் 9ஆம் திகதி உள்ளூராட்சி தேர்தல் என்று அறிவித்தது. தேர்தலை நடத்துவதற்கு எதிர்ப்புகள் ஒருபுறம் எழுந்த நிலையிலும் - அது தொடர்பில் வழக்குகள் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட போதும் மறுபுறத்தில் தேர்தலுக்காக கட்டுப்பணம் செலுத்தப்பட்டு - வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்டன. தபால் மூல வாக்களிப்பு கடந்த 23ஆம் திகதி நடைபெறுவதாக இருந்த நிலையில், தேர்தலுக்கு தேவையான நிதி கிடைக்காமையாலும் வாக்குச் சீட்டுகள் அச்சிடப்படாமையாலும் தபால் மூல வாக்களிப்பை ஒத்திவைக்க முடிவு செய்யப்பட்டது. இதன் பின்னர், மார்ச் 9ஆம் திகதி நடைபெறவிருந்த வாக்குப் பதிவும் நடைபெறாது என்றும் தேர்தல் ஆணைக்குழு அறிவித்தது. அத்துடன், புதிய தேர்தல் திகதி எதிர்வரும் மார்ச் 3ஆம் திகதி அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்தது.

இந்த நிலையில், மார்ச் 20ஆம் திகதிக்கு முன்னர் தேர்தல் நடத்தப்பட்டு புதிய உறுப்பினர்கள் தெரிவாக வாய்ப்பில்லை. இதனால், எதிர்வரும் மார்ச் 19ஆம் திகதி நள்ளிரவுடன் கலையும் உள்ளூராட்சி சபைகளின் அதிகாரம் விசேட ஆணையாளர்களின் கீழ் செல்லும். விசேட ஆணையாளர்களை உள்ளூராட்சி அமைச்சரே நியமிப்பார்.

இதேசமயம், வடக்கு - கிழக்கில் போர் நடைபெற்ற காலப்பகுதியில் உள்ளூராட்சி தேர்தல்கள் நடைபெறவில்லை. அந்த சமயத்தில் இவ்வாறான விசேட ஆணையாளர்களின் கீழேயே வடக்கு - கிழக்கின் உள்ளூராட்சி சபைகள் இயங்கின. இதுபோன்றதொரு நிலையே தற்போது மீண்டும் உருவாகியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ

## உள்ளூராட்சி..

ஆண்டுகள் நிறைவடைகின்றன. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முதல் ஜனாதிபதியின் வாரிசாக பதவியில் இருப்பதால் அவருக்கு அந்த ஆணை கிடைக்கும்.

இதன்படி, உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன்னதாக அரச தேர்தல் நடத்தப்படக்கூடிய வாய்ப்புள்ளது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.(ஐ-சி)

## மனித உரிமை...

இலங்கை, எகிப்து, துர்க்மெனிஸ்தான், ஸாம்பியா, பேரு மற்றும் பனாமா உள்ளிட்ட நாடுகள் தொடர்பான மீளாய்வு கூட்டத்தொடரே இன்று ஆரம்பமாகவுள்ளது.

இலங்கை குறித்த மீளாய்வு கூட்டத்தொடர் எதிர்வரும் மார்ச் 8 மற்றும் 9ஆம் திகதிகளில் 3 கட்டங்களாக நடைபெறவுள்ளது. மார்ச் 8ஆம் திகதி இலங்கை நேரப்படி முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணிவரை முதலாவது கூட்டத்தொடரும், அன்றைய தினம் மாலை 3 மணி முதல் 5 மணிவரை முதலாவது கூட்டத்தொடரின் இரண்டாம் கட்ட விவாதமும் நடைபெறவுள்ளன.

மார்ச் 9ஆம் திகதி முற்பகல் 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை இரண்டாவது கூட்டத்தொடர் நடைபெறவுள்ளது.

சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் 173 உறுப்பினர்களில் ஆறு கட்சிகளும் உள்ளடங்குகின்றன. இவை ஐ. நா.வுடன் ஏற்படுத்திக் கொண்டுள்ள உடன்படிக்கையை எவ்வாறு செயல்படுத்துகின்றன என்பது தொடர்பில் இந்தக் கூட்டத் தொடரில் ஆராயப்படும்.

அத்தோடு ஐ. நா. மனித உரிமைகள் குழுவின் முந்தைய பரிந்துரைகள் குறித்து 18 சுயாதீன சர்வதேச நிபுணர்கள் குழுவின் வழக்கமான மதிப்பாய்வுகளுக்கும் உட்படுத்தப்படவுள்ளது.

அந்தந்த நாடுகளின் அறிக்கைகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து பிற சமர்ப்பிப்புகளைப் பெற்றுக் கொண்டுள்ள மனித உரிமைகள் குழு, பொது உரையாடல்களின் மூலம் ஆறு பிரதிநிதிகளுடன் பல பிரச்னைகள் குறித்து விவாதிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தொடர்ந்து...

வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எவற்றையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிறைவேற்றவில்லை. இது தொடர்பாக பெரமுன கட்சியினர் பல தடவைகள் ஜனாதிபதியுடன் உரையாடினர். ஆனால், அதற்கு அவர் பல காரணங்களை கூறி அளித்த வாக்குறுதிகளை தட்டிக்கழித்து வருகிறார் இதனால் பெரமுன கட்சியினர் கடும் ஏமாற்றமடைந்துள்ளனர். இதனால் பல முக்கியஸ்தர்களும் விரக்தியடைந்துள்ளன.

இது தொடர்பில் பெரமுன கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் கூறுகையில், "முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவால் நியமிக்கப்பட்ட ஆளுநர்களை நீக்கினால் அவர் மனம் புண்படுவார் என்று கூறப்பட்டது. எனினும், வெளிநாடு சென்றுள்ள கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பியதும் அவருடன் கலந்துரையாடி- அரசாங்கத்தின் உயர் பதவிகள் தொடர்பில் முடிவு எடுக்கப்படும்.

இந்த நிலையில், கடந்த வாரம் ஜனாதிபதி தரப்புக்கு ஒரு சிறப்பு தகவல் அனுப்பப்பட்டுள்ளது. அதில், "நாங்கள் தொடர்ந்து உங்களுடன் இணைந்து பணியாற்ற விரும்புகின்றோம். ஆனால், தொடர்ந்து பணியாற்ற நாங்கள் கேட்டதனையும் உடனடியாக நிறைவேற்றி- உரிய நியமனங்களையும் விரைந்து செய்யுங்கள்", மிகவும் அழுத்திக் கூறப்பட்டது", என்று கூறினார். (ஐ-சி)

# இலங்கையின் கடன் மறுசீரமைப்பு சீனாவின் முடிவு மார்ச் 31இற்கு முன்!

## உறுதியளிக்கப்பட்டது என்கிறார் இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, பெப். 27

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஏற்றுக்கொள்ளக்கூடிய சாதகமான ஒரு தீர்மானத்தை மார்ச் 31ஆம் திகதிக்குள் அறிவிப்பதாக சீனா தெரிவித்துள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் பெற எதிர்பார்த்துள்ளோம் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள அரசாங்கம் மேற்கொண்டுள்ள பேச்சு தொடர்பில் வினவியபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கோவிட் பெருந்தொற்று தாக்கத்தின் பின்னரான காலப்பகுதியில் இலங்கை போன்ற குறைந்த வருமானம் பெறும் நாடுகள் எதிர்கொண்டுள்ள பொருளாதார பாதிப்பு மற்றும் பொருளாதார பாதிப்பில் இருந்து மீள்வதற்கு வழங்கப்படும் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் அமெரிக்கா மற்றும் சீன நிதித்துறை அதிகாரிகளுக்கு இடையில் விசேட பேச்சு கடந்த வாரம் இந்தியாவில் இடம்பெற்ற ஜி - 20 மாநாட்டில் இடம்பெற்றுள்ளது.

இந்த மாநாட்டின் இரண்டாம் கட்டத்தின்போது இலங்கை உள்ளிட்ட குறைந்த வருமானம் பெறும் நாடுகள்



எதிர்கொண்டுள்ள சீன கடன் மற்றும் இதர விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளன.

இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு சீனா இரண்டு வருட கால அவகாசம் வழங்க எடுக்கப்பட்ட தீர்மானம் இதன்போது தீவிரமாக ஆராயப்பட்டுள்ளது. இலங்கையின் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் ஏற்றுக்கொள்ளக்கூடிய சாதகமான ஒரு தீர்மானத்தை மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் அறிவிப்பதாக சீன கூட்டரசாங்கம் இலங்கைக்கு அறிவித்துள்ளது.

இலங்கையின் பிரதான நிலை கடன் வழங்குநராக சீனா விளங்குவதால் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒத்துழைப்புக்கு சீனாவின் உத்தரவாதம் அவசியமாகும். சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை எதிர்வரும் மார்ச் 31ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ளோம்.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு விவகாரத்தில் இந்தியா மற்றும் சீனாவின் ஒத்துழைப்பு சாதகமாக காணப்படுகிறது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைத்தால் இலங்கையின் அரச கடன் நிலைபேறான தன்மையில் காணப்படும். அதனை தொடர்ந்து சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்புடன் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணலாம் - என்றார்.

## ஜே.வி.பிக்கான

அதிகாரம் ராஜபக்ஷக்களுக்கும் பிரேமதாஸக்களுக்கும் இடையில் பரிமாறிக் கொள்ளப்படும் விடயமாக காணப்பட்டால் அவர்கள் தேர்தலை ஒருபோதும் ஒத்திவைக்கமாட்டார்கள். மக்களின் சிறந்த எதிர்காலத்துக்காக உள்ளூராட்சி தேர்தலுக்கான போராட்டத்தில் எந்த வழிமுறையையும் பயன்படுத்தி வெற்றிபெறுவோம் என்றும் கூறினார்.

லிப்டன் சதுக்கத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் இதனை தெரிவித்துள்ள அவர் உள்ளூராட்சி தேர்தலை அரசாங்கம் நடத்தச்செய்வதற்கான போராட்டத்தை கண்ணீர் புகைபிரயோகத்தின் மூலம் தடுக்க முடியாது - பின் வாங்கவும் முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

மருந்துகள் இன்றி மடியும் மக்களுக்காக வேலை வாய்ப்பின்றி காணப்படும் இளைஞர்களுக்காக துன்பத்தில் சிக்குண்டுள்ள விவசாயிகள், மீனவர்கள் உழைக்கும் மக்களுக்காக உள்ளூராட்சி சபை தேர்தலுக்கான இந்த போராட்டத்தில் வெற்றிபெறுவோம்.

ஊழல் இல்லாத போதைப்பொருள் இல்லாத பொதுமக்கள் பணம் கொள்ளையடிக்கப்படாத நாட்டை உருவாக்குவதற்கான போராட்டத்தில் நாங்கள் வெற்றிபெறுவோம். இது இந்த தலைமுறையின் கடமை.

நாட்டிலிருந்து குடும்ப ஆட்சியை அகற்றுவதற்காக பெருமளவு மக்கள் தேசிய மக்கள் சக்தியுடன் இணைவதால் அச்சமடைந்துள்ள அரசாங்கம் உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைப்பதற்காக சதிசெய்கின்றது. இதுவரை அதிகாரம் என்பது ஒரு சில குடும்பங்களுக்கு இடையில் பரிமாறப்படும் விடயமாக காணப்படுகின்றது. முதல் தடவையாக மக்கள் வறிய மக்களிற்கான அரசாங்கத்தை அமைப்பதற்கு முன்வந்துள்ளனர். இதன் காரணமாகவே அரசாங்கம் அதிக கலக்கமடைந்துள்ளது - என்றும் அவர் மேலும் சொன்னார். (ஐ)

## கியூ.ஆர்...

இல்லை. எரிபொருள் விலை அதிகரித்தால் 10 - 15 ரூபாய் வரையிலேயே அதிகரிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

உக்ரைன் - ரஷ்யா யுத்தம் போன்ற உலக நிலைமைகளை தன்னால் கட்டுப்படுத்த முடியாது. இவ்வாறான நிலையில் விலை எவ்வளவு குறையும் எனவும் கூற முடியாது. எது எப்படி இருப்பினும் அடுத்த மூன்று மாதங்களில் கியூ. ஆர். முறைமை முற்றாக இல்லாது ஒழிக்கப்படும். இதன் பின்னர் வழமை போன்று மக்களுக்கு எரிபொருளை பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அமைச்சர் கூறினார். (ஐ)

## பிரதமர்...

பதவிக்கு நியமிக்க சிறீலங்கா பொது ஜன பெரமுனவின் உறுப்பினர்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் உதவியை கோரியுள்ள னர் என்று பாராளுமன்ற உறுப்பினர் சன்ன ஜய சுமண தெரிவித்திருந்தார். இந்த விடயம் தொடர்பிலேயே பிரதமர் அலுவலகம் மறுப்பு வெளியிட்டுள்ளது.

மேலும், "அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டத்தை குழப்பும் வகையிலேயே இவ்வாறான சூழ்ச்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதிலொன்றுதான் இது. பிரதமர் பதவி தொடர்பில் அவ்வாறான யோசனையோ அல்லது கலந்துரையாடலோ இதுவரையிலும் முன்னெடுக்கப்படவில்லை", என்றும் பிரதமரின் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# நலநடுக்கம் தொடர்பான ஊகங்கள் இலங்கையர் அச்சப்பட வேண்டாம்!

## புவியியல் ஆய்வு மையம் அறிவிப்பு

கொழும்பு, பெப். 27

**இமயமலை அல்லது இந்தியாவின் வடக்கு பிராந்தியத்துக்கு அருகில் பெரியளவிலான நிலநடுக்கம் ஏற்படலாம் என்ற அனுமானங்களை விலக்கிக்கொள்ளவதாக இலங்கையின் புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகம் தெரிவித்துள்ளது.**

எதிர்காலத்தில் இந்தியாவின் வடக்குப் பகுதியில் சுமார் 8 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட முடியும் என புவியியலாளர்கள் எச்சரித்தனர். இதனால் இலங்கையும் பாதிக்கப்படும் என்று அவர்கள் எச்சரித்தனர். இதன்மூலம் வட இந்தியாவுக்கு அதிக சேதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்று அவர்கள் கூறுகிறார்கள்.

இந்த கணிப்பு உண்மையாக இருந்தால், இந்தியாவின் இமய மலை பகுதியிலிருந்து 2,500 மைல் தொலைவில் அமைந்துள்ள இலங்கையிலும் இந்த நில அதிர்வு உணரப்படும் என்றும் கூறப்படுகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இமயமலையை பாதித்த மைக்ரோ ரிச்டர் அளவிலான நிலநடுக்கம் கொழும்பு பகுதியிலும் உணரப்பட்டது.

இதேவேளை, கடந்த 4 வார காலப்பகுதிகுள் புத்தல மற்றும் வெல்லவாய பகுதியில் பதிவாகியுள்ளன. அவை 3 மெக்னிடியூட் (மைக்ரோ ரிச்டர்) என்ற சிறிய அளவிலான அதிர்வுகளாக பதிவாகியிருந்தது. இதனால், இலங்கையர்கள் வீண் அச்சம் கொள்ள தேவையில்லை என்று புவியியல் ஆய்வு மற்றும் சுரங்க பணியகம் தெரிவித்துள்ளது. (ஐ)

# தமிழரசு கட்சியின் வேட்பாளர் த. தே. கூட்டமைப்பில் இணைவு

யாழ்ப்பாணம், பெப். 27

இலங்கை தமிழரசு கட்சியின் பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரசார கூட்டத்தில் இணைந்து கொண்டார். அத்துடன், இனிமேல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனேயே செயல்பட போகிறார் என்றும் தெரிவித்தார்.

உள்ளூராட்சி தேர்தலில் வலி. தென்மேற்கு பிரதேச சபைக்காக குத்துவிளக்கு சின்னத்தில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து நேற்று சண்டிலிப்பாயில் பிரசார கூட்டம் நடைபெற்றது.

இதன்போது, வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் இலங்கை தமிழரசு கட்சி உறுப்பினர் சிவகுமாரும் கலந்து கொண்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தனது ஆதரவை அறிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலேயே தொடர்ந்து செயல்பட போகிறார் என்றும் அறிவித்தார். (ஐ)

# இத்தாலியில் படகு விபத்தில் 45 ஆசிய அகதிகள் மரணம்!

ரோம், பெப். 27

தெற்கு இத்தாலியில் புலம்பெயர்ந்தோர் படகு விபத்தில் 45 பேர் உயிரிழந்தனர். 81 பேர் உயிர் தப்பினர் என்று இத்தாலிய தீயணைப்பு படைகளின் சேவையின் செய்தி தொடர்பாளர் நேற்று தெரிவித்தார்.

கலாபிரிய பகுதியின் கிழக்கு கடற்கரையில் உள்ள ஸ்டெக்காடோ டி குட்ரோ கடற்கரையில் இந்த விபத்து நிகழ்ந்தது. படகு கரைக்கு வெகு அண்மையாக பாறையில் மோதி சிதைந்தது.

மூன்று - நான்கு நாட்களுக்கு முன்பு கிழக்கு துருக்கியில் உள்ள இஸ்மிரில் இருந்து படகு புறப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் மற்றும் சோமாலியாவை சேர்ந்த புலம்பெயர்ந்தவர்களை ஏற்றிக்கொண்டு புறப்பட்டுள்ளது.

சிறிய படகில் 150 பயணிகளை ஏற்றிக் கொண்டு வந்த இந்த படகு, இத்தாலிய கடலோர நகரமான குரோடோனிலிருந்து 20 கிலோமீற்றர் தொலைவிலுள்ள ஸ்டெக்காடோ டி குட்ரோவை நெருங்கிக் கொண்டிருந்தபோது ஞாயிற்றுக்கிழமை அதிகாலை பாறை ஒன்றின் மீது மோதி விபத்துக்குள்ளானது.

அந்தப் பகுதியில் நிலவிய மோசமான வானிலை காரணமாக கடல் சீற்றத்துடன் காணப்பட்டது. படகு சிதைந்து அகதிகள் கடலில் மூழ்கியுள்ளனர். இதுவரை 45 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. 80 பேர் காப்பாற்றப் பட்டுள்ளனர். உயிரிழந்தவர்களில் பெண்களும் குழந்தைகளும் உள்ளடங்குகிறார்கள். பலர் காணாமல் போயுள்ளனர். உயிரிழந்தவர்களில் 7 அல்லது 8 குழந்தைகளும், 12 வரையான பெண்களும் அடங்குகிறார்கள்.

உயிர் பிழைத்தவர்களில், 59 பேர் ஐசோலா கபோ ரிஸ/டோ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 22 பேர் மேலதிக சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் மிகவும் கவலைக்கிடமான நிலையில் உள்ளார். வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்கள் அனைவரும் முப்பது வயதுக்கு உட்பட்ட இளைஞர்கள். அவர்களில் பாதி பேர் சிறார்கள். (ஐ)



# நான் ஆணையராக இருந்தால் தேர்தலை நடத்தியிருப்பேன்!

## மகிந்த தேசப்பிரிய தெரிவிப்பு

கொழும்பு, பெப். 27

“தேர்தல் ஆணைக்குழுவின் தலைவராக நான் இருந்திருந்தால் நிச்சயம் தேர்தலை நடத்தியிருப்பேன்” - என்று முன்னாள் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரான மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பான மனு விசாரணைக்கு வருவதற்கு முன்னர், காலியில் வைத்து அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும்,

”தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. தற்போது தேர்தல் ஆணைக்குழுவுக்கு மரண சான்றிதழை வழங்குவது போன்று, வாக்குப்பதிவு ஒத்திவைக்கப்பட்டதாக வர்த்தமானி அறிவிப்பை வெளியிடுவதுதான் மிச்சம்”, - என்றார்.

இதன்போது, “தேர்தல் ஆணைக்குழுவின் தலைவராக நீங்கள் இருந்திருந்தால் தேர்தலை நடத்தியிருப்பீர்களா?”, என்று பொதுமக்கள் தேசப்பிரியவிடம் கேள்வி எழுப்பினர்.

“நான் அங்கு இருந்திருந்தால், எனக்கு துடுப்பாடத் தெரியும். ஆனால், நான் தற்போது வெளியேறிவிட்டேன். எப்படி துடுப்பாட வேண்டும் என்று என்னால் தெரிவிக்க முடியாது. விக்கெட்டில் இருப்பவர் அதனை தெரிந்து கொள்ள வேண்டும்.” - என்றும் அவர் கூறினார். (ஐ-சி)

# ரூ. 230 கோடியை வசூலிக்காத ‘ரக்னா லங்கா’ நிறுவனம்!

கொழும்பு, பெப். 27

வர்த்தகம் மற்றும் ஏனைய சேவைகளுக்காக ‘ரக்னா லங்கா’ நிறுவனம் பல்வேறு நிறுவனங்களிடம் இருந்து 230 கோடி ரூபாய்க்கு மேல் அறவிடவில்லை என்று தேசிய கணக்காய்வு அலுவ லகம் தெரிவித்துள்ளது.

நில பாதுகாப்பு சேவைகள், கடல் பாதுகாப்பு சேவை கள் மற்றும் உணவகங்கள் மற்றும் கடல்சார் பாதுகாப்பு நடவடிக்கைகளை நடத்துவது ‘ரக்னா லங்கா’ நிறுவ னத்தின் முக்கிய பணிகளாகும்.

இந்த நிறுவனம் தொடர்பில் தணிக்கை அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

மக்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையில் 165 கோடி ரூபாய் கடல்சார் பாதுகாப்பு சேவைகள் மூலம் பெறப்பட வேண்டிய கடனாகும். கடல்சார் பாதுகாப்பு சேவைகளை வழங்குவதன் மூலம் செலுத்த வேண்டிய கடனில் 92.4வீதம் - அதாவது ஏறக்குறைய 153 கோடி ரூபாய், ‘அவன்கார்ட்’ நிறுவனத்திடம் இருந்து அறவிடப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரங்கல மற்றும் காலி மிதக்கும் ஆயுதக் களஞ்சியங்களில் இருந்து 7 வருடங்களுக்கு மேலாக செலுத்த வேண்டிய 42 கோடி ரூபாயை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இந்த நிறுவனத்துக்காக 74 கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்டு தொடங்கப்பட்ட பிரதான அலுவலகம் பாதியிலேயே நிறுத்தப்பட்டுள்ளதாகவும் கட்டடம் அமைந்துள்ள 8.64 பரப்பு காணியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்படவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது. (ஐ-சி)


# மரண அறிவித்தல்



**பக்ஸ் அரிமகாசீலன் சின்னக்கோன்**
**(லண்டன்)**

அன்னார் காலஞ்சென்ற அப்புக்குட்டியார் சிங்கராஜா சின்னக்கோன் – பேர்ளி சின்னக்கோன் தம்பதியரின் அன்பு புதல்வரும், கிளடிஸ் (ஜானகி) சின்னக்கோனின் அருமைக் கணவரும், ஜெனிபர் கல்யாணி அப்பாத்துரை, சப்ரினா சிவந்தி ஆர்னோல்ட் ஆகியோரின் அன்பு தந்தையாரும், பத்மராணி நவரத்தினம், காலஞ்சென்றவர்களான பீலிக்ஸ் சின்னக்கோன், றெக்ஸ் சின்னக்கோன் மற்றும் ராணி பால்வ்றேமன் ஆகியோரின் அன்பு சகோதரரும், றொபின் அப்பாத்துரை, பிறைன் ஆர்னோல்ட் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற நவரத்தினம், மல்லிகா சின்னக்கோன், காலஞ்சென்றவர்களான ஜக்கி சின்னக்கோன், றொபர்ட் பால்வ்றேமன், பற்றிக் தோமஸ்ராஜ், பிரடெரிக் தோமஸ்ராஜ் மற்றும் அலெக்ஸான்டர் தோமஸ்ராஜ், காலஞ்சென்ற ஜஸ்மின் வேல்ஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும், டேவிட், டெபோரா, ஜொனதன் அப்பாத்துரை, சாமுவேல், ஒலிவியா ஆர்னோல்ட் ஆகியோரின் அன்பு பேரனும், கண்ணன், மாதினி, தேவிகா, பேர்ள், ஏர்ணெஸ்ற், அன்ரன், சார்ள்ஸ், நீல், ஆன், ஐசக், மார்க் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

**பூதவுடல் பார்வைக்கு:**
27.02.2023 திங்கட்கிழமை பகல் 1:00 மணிமுதல் மாலை 4:00 மணிவரை
28.02.2023 செவ்வாய்க்கிழமை காலை 10:00 மணிமுதல் நண்பகல் 12:00 மணிவரை

T.A. Ellement & Son,
21 Bridge Street, Pinner, HA5 3HR

**இறுதி ஆராதனை:**
01.03.2023 புதன்கிழமை காலை 10:30 மணி

St. Andrew’s Church,
89 Malvern Avenue,
Harrow, HA2 9ER

**நல்லடக்கம்:**
Carpenders Park Lawn Cemetery
Oxhey Lane WD19 5RL

தொடர்புகளுக்கு:
**ஜானகி - +44 79 41 439956**
**ஜெனிபர் கல்யாணி - +44 79 50 920212**
**ப்ரினா சிவந்தி - + 44 7824 617164**


இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.02.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.